Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNOTTAM

வெளியீடு:-52 மே May 2009 விலை: 10.00



"மனிதகுலத்தின் ஒரு பகுதியினர் அழிந்து கொண்டிருக்கும் போது சக மானிடர்கள் அமைதியாக இருந்துவிட முடியாது"

# மனிதாபிமான நெருக்கடியிலிருந்து மக்கள் விடுபட வேண்டும். மக்களின் ஜனநாயக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**வன்னி முள்ளிவாய்க்காலில் பணயம் வைக்கப்பட்டிருக்கும் மக்களின் உயிர் வாழ்வு தொடர்பாக உலகளாவிய ளவில் கவலைகள் தீவிரமடைந்து வருகின்றன. பல்லாயிரக் கணக்கான மக்களின் தலைவிதியுடன் விளையாடும் விளையாட்டை புலிகள் உடனடியாக கைவிட வேண்டும் என்பது உலகின் ஏகோபித்த வேண்டுகோளாக இருந்தாலும் புலிகள் அதற்கு செவிசாய்ப்பதாக இல்லை.**

மனிதர்கள் வாழக்கூடாத முறையில் வாழமுடியாத சூழ்நிலையில் அகப்பட்டிருக்கும் இந்த மக்களை மீட்பதில் தாமதமோ அல்லது தோல்வியோ உலக மானிட தர்மங்களின் மீது மிகப்பெரிய கேள்வியை எழுப்பும்.

எவ்வளவு விரைவாக முடியுமோ இந்த மக்கள் மீட்கப்பட வேண்டும். யுத்தத்தின் கோரத்தாக்குதலில் மாத்திரமல்ல பட்டினியாலும், மரணத்தை எதிர்நோக்கக்கூடிய அபாய நிலையில இந்த மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இவர்களை மீட்பதே இந்த நாட்டின் மற்றைய எல்லா காரியங்களைவிட முன்னுரிமை பெற்ற விடயமாகும்.

புலிகளிடமிருந்து விடுபட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்த சுமார் இரண்டு லட்சம் மக்களும் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும், திருமலையிலும் மற்றும் பல்வேறு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கமும், ஐ.நா மற்றும் ஸ்தாபனங்களும்.பெரும் முயற்சியை எடுத்துக் கொண்டாலும் மக்களின் பிரமாண்டமான தேவையை பூர்த்தி செய்வது சவால் நிறைந்த பணியாகவே காணப்படுகிறது.

இலங்கைக்கு சுனாமியால் ஏற்பட்ட பேரழிவுகளை கையாண்ட அனுபவம் உண்டு. மிக நீண்டகாலமாகவே அகதிகளை கையாண்ட அனுபவமும் இருக்கிறது.

எனவே நிலைமை வெகு சீக்கிரம சுமூக நிலையை எய்தும் என்று தாம் நம்பிக்கை கொள்ள முடியும்.

2007 இல் கிழக்கில் இடம் பெயர்ந்தவர்கள் மிக விரைவாகவே மீள்குடியேற்றப்பட்டார்கள். சம்பூர், மூதூர் பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய பெருவாரியான மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேற்றப்பட்டு விட்டார்கள்.

தற்போது வடக்கின் முகாம்களில் வசிக்கும் மககளின் ஏக்கமும் அதுதான் தம்மை சொந்த இடங்களுக்கு அனுப்பி விட்டால் தாம் தமது அலுவல்களை பார்த்துக் கொள்வோம் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் இருக்கிறார்கள்.


எனினும் பல இடங்களில் கண்ணிவெடிகளை அகற்ற வேண்டிய பணிகள் இருககின்றன. இன்னும் சில பிரதேசங்களில் உடனடியாகவே குடியேற்றப்படக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

எனவே கண்ணிவெடி அகற்றும் பணியும் சாத்தியமான இடங்களில் மீள்குடியேற்றத்திற்கான பணிகளும் உடனடியாகவே ஆரம்பிக்க வேண்டும்.

பாரதூரமான காயப்பட்டவர்கள், ஊனமுற்றவர்களின் நலன்களை கவனிக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஏற்கனவே இலங்கை வைத்தியர்கள், ஊழியர்களுடன் இந்திய மருத்துவர்களும், பிரான்சின் எல்லைகளற்ற மருததுவர்களும் புல்மோட்டை, திருமலை, வவுனியா, மன்னார், அனுராதபுரம், பதவியா, குருநாகல் என பல்வேறு இடங்களிலும் இரவு பகல் பாராது பணியாற்றி வருகிறார்கள்.

ஊனமுற்றவர்கள் தன்னம்பிகை பெறுவதற்கான தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் சூனியமாகி விடாமல் பிரகாசமானதாக இருக்க வழி செய்யப்பட வேண்டும்.

யுத்த கோரம், பெருவாரியான மரணங்களை அனுபவித்த மக்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக மன அழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்கான மன ஆரோக்கிய செயற்பாடுகளும் சுனாமி காலத்தில் மேற்கொள்ளப்பட்டது போல் செய்யப்பட வேண்டும்.



இந்த 30 வருடங்களிலும்- யுத்தம முடிவுக்கு வரும் இந்த நாட்களிலும் தமிழ் மக்கள் மனிதர்கள் எவரும் அனுபவிக்கக் கூடாத துன்பங்களையெல்லாம் அனுபவித்து விட்டார்கள். யுத்த நரகத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்து விட்டார்கள்.

எனவே தமிழ் மக்கள் வாழ்வு புத்துயிர் பெறுவதற்கு அரசாங்கமும், தமிழ் கட்சிகளும, சிவில் சமூகமும், சர்வதேச சமூகமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தமிழ் மக்கள் தமது உள்ளூர் விவகாரங்களை தாமே பார்த்துக் கொ

(தொடர்ச்சி 02ம் பக்கம்...)

## தொழிலாளர் வர்க்கத்துக்கு இழப்பதற்கு எதுவுமில்லை. தேசம் இல்லை. வெல்வதற்கு ஒரு உலகம் இருக்கிறது. மேதினக் கூட்டத்தில்

சோஷலிச ஐக்கிய முன்னணியின (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேச விடுதலை முன்னணி) மேதினக் கூட்டம் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்றது. அக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பத்மநாபா ஈழ மககள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் தோழர். தி.ஸ்ரீதரன்

1800 களின் பிற்பகுதியில் தொழிலாளர் வர்க்கம் தனது எட்டு மணிநேர உரிமையை உலகளாவியளவில் நிலை நாட்டியது. 1930 களில் இலங்கையின் இடதுசாரி இயக்கம் தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் இலட்சியங்களை இலங்கையில் முன்னெடுத்தது. இங்கு குழுமியிருக்கும் நீங்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையின் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் புதிய தலைமுறையினர் நீங்கள். உங்கள் முன் உரையாற்றும் போது ஒரு பெருமித உணர்வு எனக்கு ஏற்படுகிறது.

இலங்கையின் சமூக அரசியல் வாழ்வை செம்மைப்படுத்துவதில் இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. தொழிலாளி வர்க்கத்தின் உரிமை இன சமூகங்களின் உரிமை பால் சமத்துவம், தீண்டாமைக்கு எதிரான போராட்டம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

1970களின் நடுப்பகுதியில் அன்றைய ஜே.ஆர் ஆட்சியில் திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் இலங்கையின் தொழிலாளி வர்கத்தினரிடையே இன ரீதியான பிளவு கொண்டு வரப்பட்டது.

இலங்கை சுதந்திரம் பெற்ற 60 ஆண்டுகளில 30 ஆண்டுகள் யுத்தமும் வன்முறையும என்றாகிவிட்டது. இந்த நாட்டின் பிரகாசமான எதிர்காலத்திற்கு இது பெரும் தடைக்கல்லாக அமைந்திருந்தது.

இப்போது யுத்தம் முடிவுக்கு வரும சூழ்நிலை காணப்படுகிறது. எனவே இடதுசாரி இயக்கம் தனது செயற்பாடுகளை இலங்கையின் வடக்கு கிழக்கிற்கு அதிகரிக்க வேண்டும். மாசடைந்த அரசியல் சூழல் தூய்மையாக்கப்பட வேண்டும்.

இந்த மேதினத்தில் ஐக்கியப்பட்ட இடதுசாரிகள் அரசியல் அதிகாரப் பகிர்வினூடாக தேசத்தை ஒன்றிணைப்போம் என்ற கோசத்தை முன் வைத்துள்ளனர்.

எமது நாடு பல இனங்களின் வானவில்லாக கட்டியெழுப்பப்பட வேண்டும். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் என்று பேசுவதற்கு மாறாக இலங்கையர்கள் என்று பேசுவதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மக்களின் மனக்காயங்கள் ஆற்றப்பட வேண்டும்.

இன்று வடக்கின் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு கணிசமான பிரிவினர் அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 02ம் பக்கம்...)

## அரசின் உள்ளூராட்சி சபைகள் விசேட திருத்தச் சட்டத்தை கி.மா.சபை நிராகரிக்க வேண்டும்

### இரா. துரைரட்ணம்



மத்திய அரசு கொண்டு வர உத்தேசித்துள்ள உள்ளூராட்சி சபைகள் விசேட திருத்தச் சட்டத்தை கிழக்கு மாகாண சபை அங்கீகரிக்கக் கூடாது முற்றாக நிராகரிக்க வேண்டும என மாகாண சபை உறுப்பினரும் பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான இரா.துரைரட்னம் தெரிவித்துள்ளார்.

விசேட திருத்தச் சட்ட மூலம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக முன் வைக்கப்படவிருப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்

கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரம் தேவையா? இல்லையா? இது குறித்து விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மத்திய அரசு உத்தேச திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர முற்படுவது மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஒரு கையால் கொடுத்து மறுகையால் பறிக்கும் முயற்சியேயாகும்.

இதற்கு அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெற முற்படுகின்றது. இந்நிலையில் மாகாண சபை உறுப்பினர்கள் இதற்கு ஆதரவளித்தால் அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லாமல் போய்விடும். எனவே சகல உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி இதனை முற்றாக நிராகரிக்க வேண்டும்.

ஏற்கனவே 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு முழுமையாக இதுவரை வழங்கப்படவில்லை. இருக்கின்ற அரைகுறை அதிகாரங்களைக் கூட பறிக்கும் நோக்குடனேயே தற்போது மத்திய அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர முற்படுகின்றது.

இந்தத் திருத்தச்சட்டத்தின் படி வட்டார அடிப்படையில் 70 சதவீதம், விகிதாசார அடிப்படையில் 30 சதவீதம் என உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இது வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு பாதிப்பாக அமையும் .எனவே இதனை கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஒரு பலப் பரீட்சையாகக் கருதி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி நிராகரிப்பதன மூலம் கிழக்கு மாகாணத்துக்கு அதிகாரம் தேவை என்பதை வெளிப்படுத்த முடியும" என்றார் ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
Kannottam
தொ.பே.இல:-0112505372 தொ.நகல்:-0112552840
ஈ.மெயில்:- kannoddam@yahoo.com

# உயிர் வாழ்வதற்கான உரிமை

இன்று வன்னியில் பணயம் வைக்கப்பட்டிருக்கும் மக்களின் பிரச்சினை உலகின் மனச்சாட்சியை உலுக்கி நிற்கிறது. இந்த மக்களின் பாதுகாப்பு பற்றிய கவலை உலகளாவிய அளவில் சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனாலும் இந்த மக்களை நான்கு கி.மீ இற்கு குறைவான கடலோர பிரதேசத்திலிருந்து விடுவிப்பதற்கு புலிகள் கொஞ்சமேனும் கருணையில்லாமல் இருக்கிறார்கள். இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது பாரிய மாறுதல்கள் ஏதும் நிகழலாம். ஆனால் மக்கள் இந்த அவலத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்பதே எமது கவலை.

ஐ.நா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பிரிட்டன், சர்வதேச மனித உரிமை கண்காணிப்புக்குழு, சர்வதேச மன்னிப்புச்சபை, பொதுநலவாயம் என எல்லா நாடுகளும் சர்வதேச ஸ்தாபனங்களும் இரந்து கேட்டும் புலிகள் மக்கள் மீது கருணை காட்டுவதாக இல்லை.

நாளும் பொழுதும் மரணமும், எலும்பும், தோலுமான எம் மக்களும் விதியே விதியே தமிழ்ச்சாதியை என் செய நினைத்தாய் என்ற பாரதியின் வரிகளைத்தான் ஞாபகத்திற்கு கொண்டு வருகின்றன.

சின்னஞ்சிறு குழந்தைகள் ரத்தம் தோய்ந்த முகத்துடன் கண்ணீர் பெருக்கெடுத்த கண்களுடன் காட்சியளிப்பது எம்மை அமைதியிழக்கச் செய்கிறது.

இந்த மக்கள் துன்புறும் போது மனிதகுலம் அனுபவிக்கக்கூடாத துன்பங்களை அனுபவிக்கும் போது நாம் இயல்பாக வாழ முடியாது.

குழந்தைகளின் அவலக் குரல்களும், ஊனமுற்ற மனிதர்களும், உறவுகளின் சிதைவுகளும், பிரிவுகளும் ஊழிபுயலென எம் மக்களை சூழ்ந்துள்ளது.

அரச கட்டுப்பாட்டுக்குள் வந்த மக்களும் பிரமாண்டமான முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு காலமும் அவர்கள் வாழ நேர்ந்த சூழ்நிலைகளால் அவர்கள் அவ்வாறு வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இந்த மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்காக நாடுகள் பலவும் உதவ முன்வந்துள்ளன. இந்தியா கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் பங்களிக்க உள்ளது.

மன்னார் முசலி பிரதேசத்தில் மீள் குடியேற்றம் ஆரம்பித்தது நல்ல சகுனமே. இந்த நிகழ்வு துரிதமாக விஸ்தரிக்கப்பட வேண்டும். பிள்ளைகளின் கல்வி, ஊனமுற்றவர்கள் போஷித்து பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு தொழில் பயிற்சி வழங்குவதும் துரிதகதியில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக வன்முறை கலாச்சாரம் தமிழ் மக்கள் மத்தியில் அடியோடு இல்லாதொழிக்கப்பட்டு இந்த மக்கள் ஜனநாயக சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

அரசியல் அதிகார கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதன் மூலம் தமது பிரதேசங்களில் உள்ளூர் அலுவல்களை தாமே பார்த்துக் கொள்வதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். சமஷ்டி முறையிலான ஒரு தீர்வு இங்கு ஏற்புடையதாக இருக்கும்.

இவ்வாறு ஒரு பாதை தெளிவாக வகுக்கப்பட வேண்டும். இல்லாவிடில் அது சோமாலியா போன்றதொரு நிலையை நோக்கி இட்டுச் செல்வதாகவே அமையும்.

எல்லாவற்றுக்கும் முன்னோடியாக பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிருடன் அவர்களின் அவலங்களுடனும் புலிகள் நடத்தும் விபரீத விளையாட்டை முதலில் கைவிட வேண்டும். அந்த மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

இவையே நாம் இப்போது வெளியிடக்கூடிய கோரிக்கைகளாக இருக்க முடியும். இந்த நாடு கவனம் செலுத்த வேண்டிய பிரதான பிரச்சினைகளாக இருக்க முடியும்.

மனதில் ஒளி உண்டானால் வாக்கினில் ஒளி உண்டாம்

# தமிழ்-முஸ்லீம் ஐக்கியம்





தோழர் ராசிக் கணேசகுமார்

வடகிழக்கின் நிலப்பரப்பிலிருந்து பிரிக்கமுடியாத சமூகமாக முஸ்லீம் மக்கள் உள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். தமிழ் பேசும் மக்கள் என்ற குறியீட்டுக்குள் தங்களை காட்டிக்கொள்ள விரும்பாமல் தனித்துவமான இனமாகக் கருதும் போக்கு இவர்களிடையே வலுப்பெற்றுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

இது பாதகமானதும் சாதகமுமான வேறுபட்ட இயல்புகைள் கொண்டிருக்கிறது இருந்தும் தமிழ் மொழியின் பேரால் இவர்களது பணியும் குறைவானதல்ல.

தமிழ்நாட்டிலுள்ள சமூக அமைப்பல் தங்களை இன ரீதியாகத் தமிழர்களாகச் சொல்லிக்கொள்வதில் பெருமைப்பட்டுக்கொள்ளும் அதேவேளை கலாச்சார ரீதியிலும், மத ரீதியான வழிபாட்டு முறையிலும் வேறுபட்டிருக்கின்றனர்.

ஆனால் மொழி ரீதியாகத தமிழ் மக்களுடன் ஒன்றுபட்டு ஐக்கியப்பட்டு வாழும் தன்மையினை வட கிழக்கில் எதிர்பார்க்கக்கூடியதொன்றாக இன்று தோன்றவில்லை.

வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் தமிழ்த் தலைவர்களின் அரசியல் தலைமையை ஏற்றுக்கொண்டிருந்தாலும் சில நிகழ்வுகளின் தாக்கத்தால் அவ் உறவு சீர்குலைந்ததையும் அவதானிக்கலாம்.

கசப்பான பல சம்பவங்களின் பின்னணியில் தமிழ், முஸ்லீம் இன உறவில் விரிசல்கள் காலப்போக்கில் உருவாகி அதை பேரினவாதம் பயன்படுத்த ஆரம்பித்த போது புது அத்தியாயம் தொடங்கியது.

வடகிழக்கில் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் சமூக ரீதியான இறுக்கமான பிணைப்பைக் கொண்டிருந்த போதெல்லாம் பிற்போக்காளரின் எண்ணங்கள் கைகூடவில்லை. ஆனால் வாய்ப்புக்கள் தோன்றும் வரை இவர்கள காத்திருந்ததை யாரும் கண்டுகொள்ளவில்லை.

83 இற்குப் பின்னான போராட்ட வடிவங்களில் பெரும்பான்மையான முஸ்லீம் இளைஞர்கள் கவரப்பட்டு அணி திரண்டனர். அதற்கூடாகத் தமிழ் பேசும் மக்களாக முஸலீம்களை ஒன்றுபடுத்த இயக்கங்களும் முன்னெடுத்து ஓரளவு வெற்றியும் கண்டனர்.

ஆனால் பிரித்தாளும் சூழ்ச்சியால் முஸ்லீம் மக்கள் போராட்ட அரங்குகளில் இருந்து பின்வாங்கினர். இது மட்டுமல்லாது சில தவறான அணுகுமுறைகளை இயக்கங்களும் கையாண்டதால் நம்பிக்கையீனங்களும் சந்தேகங்களும் இடைவெளியை மேலும் அதிகரித்தது. சிறு பொறியை பெரும் தீயாக்கி அதில் நெய்விட்டு பலர் குளிர்காய புறப்பட்டதனால் பிளவுபட்ட இரு துருவங்களாக இரு சமூகங்களும் மாறத்தொடங்கின.

எவ்வளவுதான் மூடிமறைக்க முயன்றாலும் யதார்த்தத்தின் வெளிப்பாட்டை உணர்ந்து அதன் உண்மையில் இருந்தே ஐக்கியத்துக்கான அத்திவாரத்தை போடுதல் புத்திசாலித்தனமானது. இரு சமூகங்களும் ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் தேவையையும் புரிந்துகொண்டு வெளிப்படையான பேச்சுக்களின் மூலம் ஒற்றுமைக்கான பாதையை நாட வேண்டும்.

இருபக்க நியாயங்களில் இருந்தே இணைப்புக்கான தொடக்கம் உருவாக்கம் பெறல் ஆரோக்கியமானது. மறக்கமுடியாத சம்பவங்களின் படிப்பினைகளைக் கொண்டு எதிர்கால ஐக்கியத்தின் அவசியத்தை நிராகரிக்காது வாழும் பிரதேசத்தின் அமைதிக்காக ஒன்றுபடுதல் கட்டாயமாகும்.

இன்றுள்ள சூழ்நிலையில் முஸ்லீம்-தமிழ் இணைவின் மேம்பாட்டை தடுக்கும் நோக்குடன் பல நிகழ்வுகள் தொடர்கின்றன. இனவாத பேச்சுக்களும் வன்முறைத் தூண்டல்களும், அரசியல் லாப நோக்குடைய செயற்பாடுகளும் இதற்குக் காரணமாகின்றது. பதட்டமான நிலையை உருவாக்கி உயிர் அழிவுகளையும் உடைமைச் சேதங்களையும் ஏற்படுத்துவதால் பாதிக்கப்படுவது பாமரர்களே. அவர்களை பகடைக் காய்களாக பலியாக்குவதில் இவர்களுக்கு கொள்ளை இலாபம் போலும்.

தனிப்பட்டவர்களின் சயநல போக்கு இரு சமூகத்தவரிடமும் தீராத பகையை கொண்டு வருவதை அனுமதிப்பவர்களாக முற்போக்காளர்கள மௌனமாக இருப்பதல் மர்மமும் விளங்கவில்லை.

முஸ்லீம் மக்களுக்கெதிராக ஆயுத வன்முறையை பிரயோகிப்பவர்கள் மீதான காழ்ப்புணர்வால் அனைத்து தமிழ் மக்களும் தண்டிக்கப்படுதல் அங்கீகாரத்துக்குரியதல்ல. அது சரியென்றால் முழு முஸ்லீம் மக்களும் உள்ளிருக்கும் சிலரின் போக்கால் தண்டிக்கப்படுவதும் நியாயமானதாகிவிடும்.

இம் முரண்பட்ட கோட்பாட்டை உடைத்துக்கொண்டு நேசக்கரத்தை வலுப்படுத்தி நாம் வாழும் மண்ணில் அமைதியைக் கொண்டு வருவோம். பழையன கழிதலும், புதியன புகுதலும் கால மாற்றத்தின் தேவை கருதியே. இரு சமூகங்களிலுமுள்ள மனிதாபிமான நோக்குடையவர்கள் முன்வந்து நல்ல சகுனத்தை தோற்றுவிப்பார்களாக.

ஒவ்வொரு சமூகமும் தங்களது தனித்துவத்தை விட்டுக்கொடுக்க முடியாதென்பது ஏற்புடையதே. ஆனால் அத் தனித்துவம் ஏனைய சமூகத்தின் பாதிப்புக்கு இடையூறாக இருத்தல் ஏற்புடையதல்ல.

விட்டுக்கொடுக்கமுடியாத அம்சங்களை அனைவரும் கொண்டிருந்தாலும் விட்டுக் கொடுக்க முடிந்தவைகள் மூலமே ஒற்றுமை சாத்தியமானது. தன்னுடைய உரிமையை கேட்பது அடுத்தவரின் உரிமையை பறிப்பதற்கல்ல. வீணான சந்தேகங்கள் வீண் பகைக்கே இடமளிக்கும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு.

நன்றி– புதியகண்ணோட்டம்

## மனிதாபிமான............

01ம் பக்கத் தொடர்ச்சி

ள்ளக்கூடிய விதமாக அரசியல் அதிகார கட்டமைபொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த நாட்டுக்குள் தாம் சமதையாக நடத்தப்படுகிறோம், எமது இன, நல உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்று கருதும் விதமான அரசியல் அதிகார கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

அது நிரந்தரமானதாக மீண்டும் வன்முறைகளும், இரத்தக்களரியும் தலை தூக்காதவாறு தனி மனிதர்களதும், சமூகததினதும், ஜனநாயக சுதந்திரத்தை பாதுகாக்கும் விதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

## தொழிலாளர்........

01ம் பக்கத் தொடர்ச்சி

தெற்கின் மக்கள் சுனாமியால் எமது கரையோர சமூகம் பேரனர்த்தத்தை சந்தித்தபோது தலையில் சுமந்து சென்று உதவிகள் புரிந்தார்கள்.

இன்றும் வன்னி மக்களின் அவலம் கண்டு பெருவாரியான சிங்கள மக்கள வேதனையுறுகிறார்கள். முகாம்களில் சொல்லொணா துன்பங்களில் வாழும் மக்களின் இடர் துடைப்பதில், வன்னியில் அகப்பட்டிருக்கும் மக்களை மீட்பதில் தெற்கின் தொழிலாளி வர்க்கம் வடக்கின் தொழிலாளி வர்கத்திற்கு தனது கரத்தை நீட்ட வேணடும்.

1990 இல் சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் மார்க்சியம் காலாவதியான தத்துவம் என உலக முதலாளித்துவம் பிரச்சாரங்களை பாரியளவில் முன்னெடுத்தது.

ஆனால் வரலாற்றின் இயக்கவியல அதனை குறுகிய காலத்திலேயே பொய்யாக்கியது. லத்தீன் அமெரிக்காவிலும், நேபாளத்திலும் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் கண்கூடானவை.

இன்று உலகளாவிய அளவில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்களுக்கும் மார்க்சிய வழியில்தான் தீர்வு காணமுடியும்.

தொழிலாளர் வர்க்கத்துக்கு இழப்பதற்கு எதுவுமில்லை. தேசம் இல்லை. வெல்வதற்கு ஒரு உலகம் இருக்கிறது.

தீ. ஶ்ரீதரன்

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:–

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

No: 165, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முசலி பிரதேச மீள்குடியேற்றம் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்துமா?



மன்னாரிலிருந்து
ஞானதாஸ் சிவம்

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் வன்னி இராணுவ நடவடிக்கையின் ஆரம்பத்துடனேயே முசலி பிரதேச மக்களின் இடம் பெயர்வு நிகழ்ந்தது. தற்போது அங்கு மீள் குடியேற்றம் ஆரம்பித்துள்ளது.

இப் பிரதேசமானது முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததால் அங்கிருந்து தென்பகுதிக்கான இராணுவ நடவடிக்கைகளையும் தேவைகளையும் புலிகளால் மேற்கொள்வதாக கூறப்பட்டது. அரச கட்டுப்பாட்டு பகுதியை அண்டிய ஒரு சிறு பகுதியை மாத்திரம் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததால் அப் பிரதேசத்தை அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது சில உயிர் சேதங்களே ஏற்பட்டன. தற்போதைய மோதல்களின் போது ஏற்படும் இழப்புக்கள் போலல்லாது மக்கள் பாதுகாபபாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வர முடிந்ததால் தாக்குதல்களின் போது உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டது.

ஆனாலும் இப் பகுதி மக்கள் சொந்த இருப்பிடங்களையும், சொத்துக்களையும், தொழில் வளங்களையும் இழந்தவர்களாக கடந்த இரண்டு வருடங்கள் அகதிவாழ்வாக வாழ்ந்தார்கள். இந் நிலையில் இப் பிரதேசத்தின் மீள் குடியேற்ற நடவ்டிக்கையானது இம் மக்களின் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையின் முதற்படியாக இருப்பினும் இவர்களின் பொருளாதார இழப்புக்களை மீளகட்டியெழுப்புவதற்கு காலம் எடுக்கலாம். இப் பகுதி மக்கள் பாரம்பரியமாக விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களையே செய்து வந்தார்கள். இத் தொழில் வளங்களை மீண்டும் துரிதகதியில் ஏற்படுத்திக் கொடுக்க அரசும், பொது நிறுவனங்களும் முன்வரும் பட்சத்தில் இவர்களின வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு

கல்வியை இழந்து, அல்லது கல்வியை தொடர்வதில் கஷ்டங்களை எதிர்நோக்கும் மாணவர்களின் மனநிலையில் மன சோர்வற்ற எதிர்காலம் தொடர்பாக நம்பிக்கையுடன் கல்வியை தொடர ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் விசேட அணுகுமுறைகள் கையாளப்பட வேண்டும். இதுபோன்ற ஆரம்ப நடவடிக்கைகளின் ஊடாகவே ஆரோக்கியமான கல்வியை தொடர வழியேறபடும்.

தற்போது சவேரியர்புரம் பிரதேசத்தில் மாத்திரம் 122 குடும்பங்களைச் சேர்ந்த 409 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இன்னும் பத்தொன்பது கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்த 3000 இற்கும் அதிகமான மக்கள் குடியமர்த்தப்பட உள்ளனர். தாம் மீள் குடியமர்த்தப்படுவோம் என்ற நம்பிக்கையை கொண்டிருந்தாலும் விரைவில் குடியமர்த்தப்பட வேண்டுமென்பதே அனைவரினதும் விரும்பமாகும்.

முசலி பிரதேசத்தில் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையானது வன்னி பிரதேசத்தை புலிகளின் பிடியிலிருந்து மீட்பதற்கு ஆரம்பித்த ஆரம்ப நடவடிக்கையாக அமைந்ததால் மீள் குடியேற்றமும் அங்கிருந்து தொடங்கப்படுவது நல்லதொரு ஆரம்பம் எனலாம்.

தற்போது வன்னியிலிருந்து இடம் பெயர்ந்துள்ளவர்கள் மீண்டு தங்கள் சொந்த இடங்களில் வாழ்வதற்காக ஏங்கும் உறவுகளின் ஏக்கங்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் இந்த மீள்குடியேற்றம் ஒரு சிறு வெளிச்சமும் கூட.

1990ம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது மன்னார் நகர பிதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருக்கேதீஸ்வரம், மாந்தை, எள்ளுப்பிட்டி, நாவற்குளம், நாகத்தாழ்வு சிறுநாவற்குளம், தோட்டப்பிட்டி போன்ற இன்னும் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து மன்னார் நகர பகுதிகளிலும், வேறு இடங்களிலும், தமிழ்நாட்டு அகதி முகாம்களிலும் வாழ்ந்து வருகிறார்கள. இம் மக்களின பாரம்பரிய வாழ்விடங்கள் கடந்த 18 வருடங்களாக சூனியப்பிரதேசமாக காட்சியளிக்கின்றன..


இடப்பெயர்வுகளின் போது மன்னார் நகர பகுதிக்குள் இடம்பெயர்ந்த மக்கள கடந்த காலங்களில் பலவிதமான கஷ்டங்களை எதிர்நோக்கினார்கள். விவசாயத்தை ஜீவனோபாய தொழிலாக கொண்ட இவர்கள் நகர பகுதிகளில் தொழில்களை தேடிக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டார்கள். இவர்களின் இடப்பெயர்வு பழங்கதையானாலும் இவர்களுக்கு இருப்பிடங்களோ, உணவு மற்றும் அடிப்படை வாழ்வாதார கட்டமைப்புக்களோ அரச அதிகாரிகளால் செய்து கொடுக்கப்படவில்லை என்பது மிக வேதனையான விடயம்.

18 வருடங்களாக மன்னார் நகரப் பகுதியில் இவர்கள் வசித்தாலும் நகரப் பகுதி மக்களுக்கு கிடைக்கப்பெறும் வசதிகள், தேவைகள் இவர்களுக்கு கிடைப்பதில்லை. குறிப்பாக நகரப் பகுதியில் அரச நிர்வாகத்தால் வழங்கப்படும் குடியிருப்பு காணிகள் கூட இவர்கள் இடம்பெயர்ந்தவர்கள் என்ற காரணத்தின் அடிப்படையில் வழங்கப் படுவதில்லை.

திருக்கேதீஸ்வரம் ஆலயம் சில வருடங்களுக்கு முன்பு புனரமைப்பு செய்யப்பட்டபோது ஆலய பராமரிப்பாளர்கள், புனரமைப்பாளர்கள் என 40 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அப் பிரதேசத்தில் மள்குடியேற்றப்பட்டாலும அதுவொரு பூரணமான மீள்குடியேற்றமாக காணப்படவில்லை. மட்டுப்படுத்தப்பட்ட எல்லைக்குள் வாழவேண்டிய வாழ்க்கை முறையே அங்கு காணப்படுகிறது. இவர்கள் அங்கு தங்களது விவசாய செய்கையை மேற்கொள்ள முடியாதுள்ளதால் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கிடைக்கின்ற வேலைகளை செய்தே வாழ வேண்டியுள்ளது. தங்கள் தேவைகளுக்காக மன்னார் நகருக்குகோ அல்லது வெளி மாவட்டங்களுக்கு செல்ல வேண்டுமானால் குறிப்பிடப்படும நேரத்திலேயே போக்குவரத்து சேவைகள் இடம் பெறுகிறது.

எனவே இக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள தொடர்பாகவோ இம் மக்களை மீள் குடியமர்த்துவது, அவர்களுக்கான மறுவாழ்வு பற்றியோ எந்த இடத்திலும் பேசப்படவில்லை, வெளிக்கொணரப்படவில்லை என்பது மக்களின் வேதனையாகும். தாங்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டும் நீர் வளமும், நிலவளமும், இயற்கை வளமும் நிறைந்த தங்கள் நிலங்களின் எல்லைகளை கண்டுபிடித்து நிம்மதியாக குடியமர வேண்டுமென்ற கனவுகளை சுமந்து நிற்கின்றனர் மக்களின் இந்த நியாயமான எதிர்பார்ப்பு நிறைவு செய்யப்பட வேண்டும்.

இவையாவும் எமது மக்களின் இன்றைய அடிப்படை தேவையாக இருந்தாலும் இவற்றுக்கெல்லாம் மேலாக எம் எல்லோருக்கும் பாரிய கடமைப்பாடு உண்டு. தமிழ் பேசும் மக்களாகிய எம் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறை காரணமாக உருவெடுத்த ஆயுதப் போராட்டம் திசை தவறி பாதை மாறி சென்றதன் விளைவாக



இன்று எமது மக்கள் நடுவீதிக்கு வந்துள்ளனர். கடந்த காலங்களிலே மாற்று கருத்துக் கொண்டவர்களையும் மக்களுக்கு நேர்வழி காட்டக்கூடிய தீர்க்க தரிசனம் மிக்க தலைவர்களையும், சமூக ஆர்வலர்களையும், கல்விமான்களையும் தொடர்ச்சியாக இல்லாதொழித்த தடுத்து நிறுத்துவதற்கு வக்கற்று வேடிக்கை பார்த்துக கொண்டும், நியாயப்படுத்திக் கொண்டும் இருந்ததன் விளைவும் எமது சமூகம் இன்று நடுவீதிக்கு வந்ததற்கு பிரதானமானதொரு காரணமாகும்.

இன்றும், இனிவரும் காலங்களிலும் எமது கடந்தகால தவறுகளை உணர்ந்து, சமூகப்பொறுப்புணர்வுடன், பழிவாங்கும் எண்ணங்களை களைந்து எம் மக்கள் நிம்மதி பெருமூச்சுடன் வாழவதற்கும் அரசியல் அதிகாரத்தை பெறுவதற்கும் அனைவரும ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே நிரந்தர அமைதியை எம் மக்களின் வாழ்வில் ஏற்படுத்த முடியும்.

# வன்னி மக்களை காப்பதே இன்றைய முதன்மையான பணி



வன்னியில் எந்த கணமும் மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டு அதனை அனுபவித்துக் கொண்டும், காயமடைந்து கொண்டும் பாரிய மன அழுத்தங்களுக்கு உள்ளாகி கொண்டும் வாழும் மக்களை பாதுகாப்பதில் இன்று மற்றைய எல்லாவற்றையும் விட முக்கியமான பிரச்சினையாகும்.

சமகாலத்தில் உலக மானிடம் எதிர் நோக்கிய மனிதாபிமான சவால்களில் இது மிக பாரியதாகும். பீரங்கிகளின் பேரொலிகளுக்கு நடுவே அவர்கள் உணவு தண்ணீர், மருந்துக்காக போராட வேண்டியிருக்கிறது.

சுமார் இரண்டு லட்சம் மக்கள் தாம் பாதுகாப்பாக வாழலாம் என கருதும் இடத்திற்கு செல்லும் உரிமை மறுக்கப் பட்டிருக்கிறது.

புலிகள் தமது தற்கொலை குண்டு தாரிகள், தமது பீரங்கிகள், தமது விமானங்கள் போலவே இந்த மக்களையும் ஆயுதங்களாக பயன்படுத்துகிறார்கள். இந்த மக்களின் நாளாந்த மரணங்களை தமது இருப்புக்கான பிரச்சாரத்திற்கு உலகளாவிய அளவில் அவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

இந்த மக்கள் மீது எந்தவித அனுதாபமும் இல்லாமல் பிரபாகரன் எமது தேசிய தலைவர், புலிகள்தான் தமிழர்களின் ஏகபிரதிநிதிகள், தமிழீழம்தான் எங்கள் ஒரே தாகம் என்று பிரச்சாரம் பண்ணுகிறார்கள்.

தமிழர்கள் வாழ்ந்தாலென்ன செத்தாலென்ன புலிகளின் கற்பனை ராச்சியம் அத்தனை பயங்கரவாத கட்டமைப்புக்களுடனும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

மறுபுறம் புலிகளின் பாசிசத்தை தோற்கடிப்பதில் அரசு கணிசமான தூரம் சென்றிருந்தாலும் மக்களை பாதுகாப்பதிலும் அவர்களுக்கு நம்பிக்கைதரும் விதமாக காரியங்கள் ஆற்றுவதற்கு வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது.

முதலாவதாக பல்லாயிரக் கணக்கானவர்கள் ஊனமடைந்திருக்கிறார்கள். அவர்களுக்குரிய வைத்திய வசதிகள் அவர்களது மனநிலையை தெம்பூட்டும் நம்பிக்கைகளை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஊனமுற்றவர்கள் இந்த சமூகத்தில் மனிதர்களாக தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்கான அனைத்து கட்டமைப்புக்களும் உருவாக்கப்பட வேண்டும். ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை விட இது முன்னுரிமை பெறும் விடயமாகும். காயமடைந்தவர்களின் உற்றமும் சுற்றமும் இவர்களுக்கு அனுசரணையாக வைத்தியசாலைக்கு வந்து செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

அவர்களின் துயரம் சாதாரணமானதல்ல. உற்ற சுற்றத்தை இழந்திருக்கிறார்கள். உயிருடன் இருக்கும் உறவுகளை பிரிந்திருக்கிறார்கள். அனைத்து சொத்துக்களையும், வீடு மனைகளையும் இழந்திருக்கிறார்கள். இழப்பதற்கு எதுவும் இல்லை என்பதைவிட மோசமான நிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் எமது சமூகத்தின் செல்ல பிள்ளைகளாக பராமரிக்கப்பட வேண்டும். அரசியல் கட்சிகள், சமூக பிரக்ஞை கொண்ட அமைப்புக்கள் உலகளாவியளவில் வாழும் எமது உறவுகள் இவர்களுக்கு உதவும் சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

இதேபோல்தான் அகதி முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அந்த வாழ்க்கை நிரந்தரம் என்று ஆகிவிடாமல அவர்கள் சொந்த இடங்களுக்கு சென்று வாழ்வதற்கான ஏற்பாடுகள் இப்போதே ஆரம்பிக்கப்பட வேண்டும். ஒரு சமூகமாக வாழ்வதற்கான உரிமை அவர்களின் நடமாடும் சுதந்திரம், பிள்ளைகளின் கல்வி, தொழில், வேறு ஜீவாதார நடவடிக்கைகள் இங்கு முக்கியமானவை. சமூகத்தை முற்றுமுழுதாக பலவீனப்படுத்தும் விதமாக எழுந்து நிற்க முடியாத சூழ்நிலைகளுக்கு இட்டுச் செல்வதாக நடவடிக்கைகள் அமைந்து விட்டன. ஏற்கனவே புலி பாசிசம் தமிழ் சமூகத்தை கடந்த கால் நூற்றாண்டுகளாக பலவீனப்படுத்தி வந்திருக்கிறது. இதன் தொடர்ச்சியாக நடைபிணங்களாக வாழும் நிலைக்கு இட்டுச் செல்ல முடியாது.

இந்த மக்களுக்கு உதவுவதில் ஜனநாயகம் கடைபிடிக்கப்பட வேண்டும். ஜனநாயக, சமூக அரசியல் சக்திகள் ஆர்வலர்கள் இந்த மக்களுக்கு உதவும் விதமாக சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். சர்வதேசமும், அரசும் உதவுவது ஒருபுறமிருக்க இது ஜனநாயக நாடொன்றில் இயல்பாகவே தொழிற்பட வேண்டியதாகும்.

உறவுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் மக்கள் இணைந்து வாழ ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அவர்களின் நடமாடும் சுதந்திரம் சொந்த இருப்பிடங்களுக்கு செல்வதற்கான உரிமை என்பன உறுதிப்படுத்தப்படுவதும், பாதுகாக்கப்படுவதும் அவசியமாகிறது. அவர்களை அந்நியர்கள்

(தொடர்ச்சி 06ம் பக்கம்...)

# மானிட தர்மமும் பாசாங்கும்

வன்னியில் புலிகளால் பணயம் வைக்கப்பட்டிருக்கும் மக்களை விடுவிக்குமாறு இந்த உலகமே கோரிக்கை விடுத்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பு அன்றி புலம் பெயர்ந்த நாடுகளில் ஆர்பாட்டம் நடத்தும புலி ஆதரவாளர்கள் இந்தக் கோரிக்கையை அவதந்திரமாக தவிர்த்து வருகிறார்கள்.

அவர்களை பொறுத்தவரை புலிகளின் அதிகாரம், இருப்பு என்பன மக்களின் உயிர் வாழ்க்கையை விட முக்கியமானது. மக்கள் இருக்கிறார்களோ இல்லையோ புலிகளும அவர்களுடைய ஆயுதங்களும், அவர்களுடைய பயங்கரவாதமும் கட்டிக்காக்கப்பட வேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள்.

புலம் பெயர்ந்த நாடுகளில் வெகு சௌகரியமாக அந்த நாடுகளில் காணப்படும் ஜனநாயக சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவர்கள் நல்ல கல்வியையும், பொருளாதார வாய்ப்பு வசதிகளையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் வன்னியில் நாளும் பொழுதும் செத்துக் கொண்டிருக்கும், ஊனமுற்றுக் கொண்டிருக்கும் மக்களை பற்றிய எந்த கரிசனையும் இல்லாமல் அவர்களை விடுவிக்குமாறு புலிகளை கோராமல் புலிகள் பாணியில் உடையணிந்து (யுத்தம் என்பது கொடுமையானது, அதில் சம்பந்தப்படுபவர்கள் மிகுந்த நரக வேதனையை அனுபவிப்பர். ஆனால ஏதோ நாடகத்திற்கு வேஷம் அணிந்து செல்வது போல் உல்லாசமாக ஐரோப்பாவினதும், வட அமெரிக்காவினதும் சுதந்திரமான, ஆரோக்கியமாக தெருக்களில் உலா வருகிறார்கள்) புலி பாசிசத்தை தக்க வைப்பதற்கான விநோத உடை ஊர்வலங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

துன்புறும் மக்களுக்காக இரத்தக் கண்ணீர் வடிப்பவர்களை அவர்களுக்காக வீதியில் இறங்கியிருப்பவர்களை இங்கு நாம் சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்த வேண்டும். ஆனால் புலி பாசிசத்தை பாதுகாப்பதற்காக வடக்கில் முழு தமிழ்ச் சமூகமுமே ஊனமுறுவதற்கும், அழிந்து போவதற்கும் துணை நிற்பவர்களை புலம் பெயர் தளத்தில் மாற்றுக் கருத்துக் கொண்டோர் அம்பலப்படுத்தியாக வேண்டும்.

அதிகூடிய பொருளாதார வளங்களுடன் புலி பாசிசத்தை தக்கவைப்பதற்கான இயக்கத்தை உலகளாவியளவில் நடாத்துபவர்கள் இங்குள்ள மக்கள் அழிந்து போவதற்கு துணை நிற்பவர்களாகவே கருத முடியும் ஒரு விதத்தில் இது இரண்டு வர்க்கங்களுக்கு இடையிலான நிலைமை மாதிரியும்கூட.

வன்னியில் உள்ள மக்கள் சாவதற்கு விதிககப்பட்டவர்கள். புலி பாசிசம் பாதுகாக்கப்பட வேண்டும். அதனூடாக தமது சௌகரியமான இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அகங்காரத்துடனேயே இவர்கள் வீதியில் இறங்கியிருக்கிறார்கள். மக்கள் பற்றி இவர்களுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் ஐ.நாவின் மனித ஆணையகத்தின் பணிப்பாளர் ஹோம்ஸ் கேட்டுக் கொண்டதுபோல் புலிகள் மனித கேடயங்களாக வைத்திருக்கும் மக்களை விடுவிக்குமாறு கேட்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | முகாம் | குடும்பங்கள் | அங்கத்தவர் |
|---|---|---|---|
| 01 | திருநகர் நலன்புரி நிலையம் | 30 | 72 |
| 02 | கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை | 200 | 483 |
| 03 | மிருசுவில் அ.த.க பாடசாலை | 580 | 1773 |
| 04 | கொடிகாமம் அ.த.க பாடசாலை | 306 | 1004 |
| 05 | கைதடி சைவ சிறுவர் இல்ல விடுதி | 76 | 214 |
| 06 | கைதடி பல்கலைக்கழக, மாணவர் விடுதி | 420 | 1101 |
| 07 | கைதடி PRI-A நலன்புரி நிலையம் | 247 | 715 |
| 08 | கைதடி PRI-B நலன்புரி நிலையம் | 213 | 626 |
| 09 | சாவக்கச்சேரி இந்துகல்லூரி | 431 | 270 |
| 10 | கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி | 389 | 1176 |
| 11 | சாவக்கச்சேரி இந்து மகளிர் கல்லூரி | 460 | 1395 |
| 12 | நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 473 | 1250 |
| | மொத்தம் | 3825 | 11079 |

## இடம்பெயர்வு

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் திருநகர், கோப்பாய், மிருசுவில், கொடிகாமம், கைதடி, நாவற்குளி ஆகிய இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விபரம் பட்டியலிடப்பட்டுள்ளது.

கடந்த 20ம் திகதி அரசாங்கத்தால் மோதல் தவிர்ப்பு பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்த மாத்தளன் பகுதியிலிருந்து 2,000 இற்கும் அதிகமானவர்கள நூறுக்கும் மேற்பட்ட படகுகளில் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். 23ம் திகதி வரை குடாநாட்டுக்கு வருகை தந்துள்ள மக்களின் மொத்த தொகை 11,123என அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தென்மராட்சியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மாகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படாதிருக்க, இந்த மக்களை வேறு இடங்களில் உள்ள பாடசாலைகளில், அல்லது வேறு இடங்களில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.



இடம்பெயர்ந்து வந்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்ட 22 பேர் அவர்களது உறவினர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளனர். தனித்தனியாக பிரிந்த 150 குடும்பங்கள் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் பொதுப்பணிகளில் தீவிர ஈடுபாடு காட்டிவரும் இந்து அமைப்புக்கள் இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு உதவுவதிலும் அக்கறை காட்டி வருகின்றன. யாழ் வர்த்தகர்களும் இந்த மக்களுக்கு உதவ நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு தேவையான மருந்து வகைகள வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கோரிக்கைகளுக்கு அமைவாக கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

## மீள் குடியேற்றம்

தென்மராட்சி தெற்கு பகுதிகளான மறவன்புலவு, தனங்கிளப்பு பகுதி மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு செல்லவும் அவர்களது பாரம்பரிய தொழில்களான விவசாயம் மற்றும் மீன்பிடியில் ஈடுபடுவதற்கும், அவர்களது குடியிருப்புக்களை அண்டியுள்ள வயல்நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும். இந்த மக்கள் 2000ம் ஆணடிலிருந்து தமது வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வசித்து வருகின்றனர். இதனால் பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்தும், ஜீவனோபாயத்திற்கு வழிவகையின்றியும் காணப்படுகின்றனர். பூநகரி படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் குடாக்கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டது போன்று இந்த மக்களும் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு அனுமதிக்கப்படுவது அவசர, அவசியமாகும்.

## போக்குவரத்து

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்த கைதடி சந்தியிலிருந்து கோப்பாய் சந்திவரையான வீதியில் உடைந்திருந்த பாலம திருத்தியமைக்கப்பட்டு போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

யாழ் நகரில் நீண்டகாலமாக போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்த பல வீதிகளில் போக்குவரத்து செய்வதற்கு விதிககப்பட்டிருந்த தடை விலக்கப்பட்டுள்ளது.

ஸ்ரான்லிவீதி, வெலிங்டன் சந்தியிலிருந்து நவலர் வீதி வரை செல்லும் மணிக்கூட்டு வீதி, முட்டாஸ் கடை சந்தியிலிருந்து, சத்திரச் சந்தி வரையான காங்கேசன்துறை வீதி எனபன போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முன்னர் முற்றாக தடைவிதிக்கப்பட்டு பின்னர் சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆட்டோ என்பவற்றின் போக்குவரத்திற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்த ஆரியகுளம் சந்தியிலிருந்து (ஸ்ரான்லி வீதி) அஸ்பத்திரி வீதி வரை செல்லும் பருத்தித்துறை வீதி இவ்வீதியின் தொடர்ச்சியாக ஆஸ்பத்திரி வீதியிலிருந்து வேம்படி சந்தி வரை செல்லும் முதலாம் குறுக்கு வீதி என்பனவும் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. முன்னர் வேம்படி சந்தியிலிருந்து முதலாம் குறுக்குத் தெரு வழியாக ஆஸ்பத்திரி வீதிக்கு வருவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

பிரதான வீதியில் முதலாம் குறுக்குத்தெரு சந்திக்கும் இடத்திலிருந்து துரையப்பா விளையாட்டரங்கு, முனியப்பர் கோவில், வீரசிங்கம் மண்டபம், தபால் நிலையம், சந்திரச்சந்தி ஊடாக பஸ்நிலையம் வரை செல்லும் வழி இருவழி போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. இவ்வீதி முன்னர் நகருக்குள் வருவதற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தது,

அத்துடன் யாழ் நகரில் வீதிகளில அமைக்கப்பட்டிருந்த அனைத்து வேகத்தடைகளும் அகற்றப்பட்டுள்ளதும் பொதுமக்களின் போக்குவரத்தை மிகவும் இலகுபடுத்துவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ் மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்கு செல்வதற்கும், வெளி இடங்களிலிருந்து யாழ்மாவட்டத்திற்கு வருவதற்கும் நிலவி வந்த போக்குவரத்து நெருக்கடிகள் இன்னும் தீர்ந்தபாடாய் இல்லை.

யாழ் நகரிலும், யாழ் மாவட்டத்தின் ஏனைய நகரங்களிலும் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 1996 ஆம் ஆண்டு யாழ்குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் பல தடவை போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட போதும் பாதுகாப்பு நிமித்தம் அவர்களது சேவை தொடரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இராணுவத்தினரின் உதவியின்றி பொலிஸார் சுயாதீனமாக கடமைகளை மேற்கொள்ள முடியாத சூழல் நிலவியமையால் போக்குவரத்து பொலிஸாரின் சேவையையும் தொடர்ச்சியாக பெறமுடியவில்லை.

தற்போது கடமையில் ஈடுபட்டிருக்கும் போக்குவரத்து பொலிஸார் போக்குவரத்துக்களை ஒழுங்குபடுத்துவதுடன் சாரதி அனுமதிபத்திரம், வரி மறறும் காப்புறுதி அனுமதிப்பத்திரம், என்பவற்றை பரிசோதிப்பதுடன் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்களும் அவர்களுடன் பயணிப்பவர்களும் தலைக்கவசம் அணிந்துள்ளார்களா என்பதையும் கண்காணித்து வருகின்றனர்.

## படுகொலைகள் கடத்தல்கள

யாழ் குடாநாட்டில் கடந்த, 2002 பெப்ரவரி சமாதான உடன்படிக்கைக்கு பின்னரும் 2006 ஆகஸ்ட் மோதல் வெடித்த பின்னரும் தினசரி ஒருவர் வீதம் மாதம் முழுவதும் படுகொலைகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்கள் உண்டு. இரண்டு நாட்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் அல்லது அதைவிட அதிகமான அளவில் பல மாதங்களில் படுகொலைகள் இடம்பெற்றதற்கான புள்ளி விபரங்கள் உள்ளன. 2009ம் ஆண்டில் சில மாதங்களாக இத்தகைய படுகொலைகள் இடம்பெறுவதில்லை என்பது குடாநாட்டு மக்களுக்கு நிம்மதி தருவதாகும்.

## மீன்பிடி

நாட்டின் மேற்கு பக்க கடற்கரைப் பகுதி முழுவதும் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டு இறுதியில் பூநகரி பகுதியும் கைப்பற்றப்பட்ட பின்னர் யாழ் குடாநாட்டில் குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை பகுதி மீனவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த மீன்பிடி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இதனால் மீனவர்களின் தொழில் வாய்ப்பு அதிகரித்து வருவாய்க்கு வழி ஏற்பட்டுள்ளது. இரவு நேர மீன்பிடி நீண்டகாலமாக தடைப்பட்டுள்ள போதும் தற்போது மீன்பிடிக்கும் நேரம் அதிகரிக்கப்பட்டு காலை 5 மணியிலிருந்து மாலை 4 மணிவரை மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்கப்பட்டிருப்பதுடன் செவ்வாய், வியாழன் தவிர்ந்த நாட்களில் 8 மற்றும் 10 குதிரை வலு கொண்ட வெளி இணைப்பு இயந்திரங்களை பயன்படுத்துவதற்கும் அனுமதிக்கப்பட்டிருப்பது நீண்டகாலம் தொழிற் பாதிப்புக்கு உள்ளாகியிருந்த மீனவர்களுக்கு ஆறுதல் அளிப்பதாகும்.

குருநகர் இறங்குதுறைக்கு சமீபமாக அமைந்திருந்த அலுப்பாந்தி மீனவர்கள் கடலிலிருந்து கொண்டுவரும் மீன்களை மொத்தமாக ஏலம்கூறி விற்பனை செய்யும் சந்தை உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ளதாக கூறி மீனவர்கள் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இம் மாதம் முற்பகுதியில் மீண்டும் இச்சந்தையை பயன்படுத்த மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது அண்மைக்காலத்தில் இப்பகுதி மீனவர்களுக்கு கிடைத்துள்ள மற்றொரு நன்மையாகும்.




| பொருட்கள் | ப.நோ.கூ.ச | தனியார் | கொழும்பு |
|---|---|---|---|
| அரிசி நாடு | 90, 108 | 80, 90, 100 | 70, 80 |
| தீட்டல் பச்சை | 118 | 115 | 60 |
| சம்பா | 90 | 90, 95 | 70, 80 |
| கோதுமை மா | 72 | 75 | 68 |
| சீனி | 81 | 84 | 78, 80 |
| பருப்பு (மஞ்சள்) | இல்லை | 170 | |
| பருப்பு (சிவப்பு) | 140 | 140 | 160 |
| பயறு | 150 | 150 | 140 |
| உடைத்த உளுந்து | 145 | 145 | |
| கடலை | 156 | 155 | 160 |
| ரவை | 125 | 125 | |
| உப்பு | 50 | 50. | |
| புளி | 70 | 70 | |
| செத்தல் மிளகாய் | 240 | 240 | |
| மல்லி | 230 | 230 | |
| மரக்கறி எண் லீட்டர் | 180 | 180 | |
| தேங்காய் எண்ணெய் | இல்லை | 200 | |
| அவல் | 130 | 130 | |
| லக்ஸ்பிறே 400கி | இல்லை | 190 | |
| அங்கர் 400கி | இல்லை | 270 | |
| நெஸ்ரோமோல்ட் 400கி | 260 | 275 | |
| சன்லைட் | 32 | 32 | |
| லக்ஸ், லை.்.ப்போய் | 35 | 35 | |
| மண்ணெண்ணெய் | 59. 60 | 70 | |
| பெற்றோல் | 130. 50 | 140 | |
| சைக்கிள் ரயர். ரியூப் | | 700, 750 | |
| சீமெந்து | | 1200, 1300 | |

## விலைவாசி

யாழ் குடாநாட்டில் பொருட்களின் விலைகள் முன்னர் இருந்ததைவிடவும் குறைவடைந்துள்ளது. பல நோக்கு கூட்டுறவு சங்கங்களில் கொள்வனவு செய்யப்படக் கூடிய பொருள்கள் சில தனியார் கடைகளில், பலநோக்கு கூட்டுறவு சங்க விற்பனை விலையை விட குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக் கூடியதாயுள்ளது. பல நோக்கு கூட்டுறவு சங்கங்களில் நியாயமான விலையில், தேவையான அளவு பொருட்களை பெறக்கூடிய நிலை தோற்றுவிக்கப்பட்டால் யாழ் குடாநாட்டில் பொருட்களின் விலை குறைந்துவிடும் என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும். பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் பொருட்கள் தரம் குறைந்தவையாக காணப்படுவதும் நிவர்த்தி செய்யப்படுமாயின் மக்கள் பெரும் பயனடைவர்.

கொழும்பிலிருந்து பொருட்களை கொண்டுவருவதற்கு லொறி லோட் ஒன்றுக்கு 1 இலட்சத்து 57 ஆயிரத்து 500 ரூபாவை லொறி கூலியாக செலுத்த வேணடியிருப்பதாக வர்த்தகர்கள தெரிவிக்கின்றனர். இதுவே தமது சொந்த லொறியை பயன்படுத்தி எடுத்து வருவதாயிருந்தால் வெறும் 50 ஆயிரம் ரூபாவுடன் எடுத்துவர முடியும எனவும் குறிப்பிடுகின்றனர்.

10 ஆயிரம் ரூபாவை கொழும்பில் பொருட்களை கொள்வனவு செய்யும் இடத்திலிருந்து ஏ-9 வீதியில் பொருட்களை எடுத்து செல்வதற்காக ஒப்படைக்கப்படும் இடம் வரை எடுத்து செல்வதற்கு 10 ஆயிரம் ரூபாவை செலவிடுவதாகவும். பின்னர் லொறி கூலியாக 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டியிருப்பதாகவும், பின்னர் ஏ9 வீதியில் கொண்டு செல்லப்படும் பொருட்கள் இறக்கப்படும் நாவற்குளி களஞ்சியசாலையிலிருந்து பொருட்கள் விற்பனை செய்யப்படும் இடம்வரை எடுத்து செல்தைற்கு லொறி கூலியாக 10 ஆயிரம் ரூபாவையும் செலவிட வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சேம நலன் பேணல் என்ற பெயரில யாழ் வணிகர் கழகத்திற்கு 7 ஆயிரத்து 500 ரூபாவுமாக மொத்தம் 1 இலட்சத்து 57 ஆயிரதது 500 ரூபா செலவிட வேண்டியிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பெருந்தொகை பணம் செலவிடப்படுவதால் பொருட்களின் விலைகளை குறைக்க முடியவில்லை என்பது மொத்தவியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு தெரிவிக்கும் காரணம. அவ்வாறெனில் ஏ9 வீதியூடாக கிலோ ஒன்றுக்கு 8 ரூபா கட்டணம் செலுத்தி கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட அப்பிள் மற்றும் தோடம்பழம் ஒன்று 90 ரூபாவிற்கு விற்கப்பட்டது ஏன் என்று கேட்கிறார் விஷயமறிந்த பாதிகக்ப்பட்ட பாவனையாளர் ஒருவர். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்கட்சிகள் அரசியலுக்காக முரண்பட்டுக்கொண்டு இருக்காது மக்களுக்காக ஒன்று சேரவேண்டிய காலமிது.

"விடியும் விடியும் என்றிருந்தோம் இது முடியும் பொழுதாய் விடிந்ததடா கொடியும் முடியும் தாழ்ந்ததடா குடியும் குலமும் ஓய்ந்ததடா" வன்னியில் சிக்குண்டு தவிக்கும் மக்களையும் மூன்று சகாப்த காலமாக தமிழீழம் என்று கூறி புலிகளால் ஏமாற்றப்பட்ட மக்களை நினைக்கும் போது இந்த பழைய தென்னிந்தியப் தத்துவப்பாடலின் வரிகள்தான் நினைவுக்கு வருகிறது.



சித்திரைப் புத்தாண்டு வடபகுதி தமிழ் மக்களுக்கு அமைதியாகவும், பிராத்தனையோடும் ஆடம்பரமற்ற முறையில் கழிந்து சென்றாலும் வன்னிப் பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்கு பெயருக்கேற்ற விரோதிப் புத்தாண்டாகவே அமைந்துள்ளது. வன்னியில் நடைபெறும் மோதல்களில் சிக்கி நாளாந்தம் பல மக்கள் இறந்தும், காயமடைந்தும் வருகின்றனர். இந்தத் தகவல்கள் மிகைப்படுத்தப்படுகின்றது என ஒருசாரார் கருத்துத் தெரிவித்தாலும் அங்கு மக்கள நாளாந்தம் வேதனைபடுகின்றனர் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான வேண்டும். தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கம் 48 மணிநேரம் போர் நிறுத்தத்தை அறிவித்தது. இந்த காலஅளவு போதாது என்றாலும் இதனை வரவேற்பதாக ஐ. நாடுகள் பொதுச்செயலாளர் பான் கீ மூன் கூறிய அதே வேளையில் புலிகள் இந்த அறிவிப்பை மதித்து மக்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.

ஆனாலும் இந்த போர் நிறுத்த காலத்தில குறைந்தளவு மக்களே படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு புலிகளின் பிடியிலிருந்து தப்பி வந்திருந்தனர். குறிப்பாக 26 பேர் யாழ்ப்பாணம் வந்தனர். ஆனால் பின்பு இராணுவம் மேற்கொண்ட முயற்சியால் ஒரு இலட்சம் மக்கள் மீடகப்பட்டு கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ளனர். அவர்களின் கருத்துப்படி அங்குள்ள ஏனைய மக்களும் போரில்லாத பகுதி களை நோக்கி வர விரும்புவதாகவும் புலிகள் அவர்களை தடுத்து வைத்திருப்பதாகவும் தெரிவித்தனர். இதிலிருந்து ஐ. நா. செயலாளரின் கருத்தை புலிகள் மதித்து நடக்கவில்லை என்று புலப்படுகிறது. அது மட்டுமின்றி அங்கு பொருளாதாரத்தால் மக்கள் கடும் துன்பத்தை எதிர்நோக்குவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தால் அனுப்பபடும் நிவாரணப் பொருள்கள் புலிகளின் வியாபார நிலையங்களில் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. சீனி, மா, அரிசி போன்றன 1000 ரூபாவிற்கு அதிகமாகவும் தேங்காய் 700 ரூபாவிற்கு விற்கப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு மக்கள் சொல்லொணாத் துன்பத்தில் அவதிப்பட்டாலும் புலிகள் தமது அராஜக அடக்குமுறையை இன்னும் கைவிட்டதாகத் தெரியவில்லை. ஒரு பக்கம் மோதல்களில் சிக்கி இறந்தும், காயமடைந்தும் கொண்டிருக்க மறு பக்கம் புலிகளின் அதிகார வெறியாட்டத்திற்கு அடங்கி நடக்கவேண்டிய சூழ் நிலையில் மக்கள் உள்ளார்கள். என்பதை நினைக்கும் போது எல்லாத் தமிழ் மக்களு க்கும் புலிகள் மீது வெறுப்பே ஏற்படுகிறது.

"உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத் திற்கு இரு பக்கம் அடி" என்ற நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்க தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தமக்கிடையில் சண்டையிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். வன்னிப் பிரச்சினை குறித்து பேசுவதற்கு அண்மையில் இந்தியா அழைத்த போது கூட்டமைப்பின் சிறிகாந்தா எம்.பி இவ்வழைப்பை நிராகரிப்பதாக தெரிவித்தார். ஆனால் சம்பந்தன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் இவ்வழைப்பை ஏற்று அங்கு சென்றுள்ளனர். இதனால் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் மேலும் அதிகரித்ததாக தெரிகிறது. மக்கள் பாதுகாப்பு குறித்து கூட்டமைப்பினர் அக்கறையில்லாமல் தமக்குள் சண்டையிட்டுக் கொளவது எல்லோர் மத்தியிலும் விசனத்தையே ஏற்படுத்துகிறது. முன்னர் ஒரு தடவை இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து ஆலோசனை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்தபோதும் கூட இவ்வாறான உள்முரண்பாட்டினால் ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெறவில்லை. தமிழ் மககளைப் பாதுகாப்பதற்கு உலகத் தமிழர்கள் உட்பட சர்வதேச நாடுகள் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதும் கூட்டமைப்பினர் இவ்வாறு தமக்கிடையில் சண்டையிட்டுக் கொள்வது மிகவும் கேவலமான விடயமாகும். "எலி அழுதாலும் பூனை விடுவதில்லை" என்ற நிலையில் அரசாங்கம் புலிகளை முடக்கும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கம் இவ்வேளையில் மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் பேச்சு நடத்த அழைப்பு விடும் சந்தர்பங்களை கூட்டமைப்பினர் நழுவவிடக் கூடாது. முன்பு ஒரு தடவை மக்கள் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்த தமிழ்தேசிய கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்த போது அவர்கள் அதை உதாசீனம் செய்துவிட்டு மாறாக அரசாங்கம் மீது வீண்பழி சுமத்துவதாக அண்மையில் ஜனாதிபதி குற்றம் சாட்டியிருந்தார்.

ஐ. நா வின் கருத்துப்படி (ஒரு இலட்சம் மக்களை மீட்பதற்கு முன்பு) ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் அங்கு வாழ்ந்து கொண்டு இருப்பதாக கூறப்படுகிறது. அவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும், இடம் பெயர்ந்த மக்களின் எதிர்கால வாழ்க்கையை சீர்படுத்துவதற்காக எல்லாத் தமிழ் கட்சிகளும் இச் சந்தர்பபத்திலாவது ஒன்று சேர்ந்து தீர்க்கமான ஆலோசனையொன்றை அரசிற்கு முன்வைத்தால் என்ன? என்ற கருத்து எல்லோர் மனங்களிலும் தற்போது எழுகிறது. இதுவரை காலமும், கொள்கை ரீதியாகவும், கோட்பாடு ரீதியாகவும், தத்துவ ரீதியாகவும் அரசியலுக்காக முரண்பட்டுக் கொண்டிருந்த தமிழ்கட்சிகள் நான் பெரிது நீ பெரிது என்று பார்க்காமல் இப்பிரச்சினையிலாவது ஒன்றுபட்டு ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டிய அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இதைப் பயன்படுத்தி மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் தமிழ்க் கட்சிகள் ஈடுபடவேண்டும். "தனிமரம் தோப்பாகாது" என்பதை பிரபாகரன் புரிந்து கொள்ளாமல் தமிழ் ஈழத்திற்கு நானே ஏகராசா என்று கூறிக்கொண்டு ஏனைய தமிழ் இயக்கங்களை அழித்த அவருக்கு தற்போது ஏற்பட்டுள்ள நிலை என்ன? என்பதை புரிந்து கொண்டு இத் தருணத்திலாவது அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்று சேர்ந்து வன்னியில் சிக்குண்டு எஞ்சியிருக்கும் மக்களை பாதுகாக்கவும், இடபெயர்ந்துள்ள மக்களின் வாழ்க்கையை சீர்படுத்துவதற்கும் ஒன்றுபடவேண்டும். குறைந்த பட்சம் போர்நிறுத்த கால அளவையாவது அதிகரிப்பதற்கு தமிழ்க கட்சிகள ஆலோசனை ஒன்றை அரசுக்கு முன்வைக்க வேண்டும். 48 மணி நேரத்தை ஒரு வாரமாவது அதிகரிக்க வேண்டும். என அரசிற்கு கூறவேண்டும். ஏன் எனில் அரசு அறிவித்த கால அளவை மக்கள் தக்கவாறு பயன்படுத்தி வெளியேறுவதற்கு போதாது எனற கருத்தே நிலவுகிறது. இதையே இந்தியத் வெளிவிகார அமைச்சர் பிராணாப் முகர்ஜி வலியுறுத்தியுள்ளார். தேர்தல் பிரச்சாரத்திற்காக அண்மையில் தனது சொந்த மாநிலமான மேற்கு வங்காளத்திற்கு சென்ற அவர் கொல்லத்தா நகரில் வைத்து இலங்கை அரசாங்கத்தின் இரு நாள் மோதல் நிறுத்தத்தை மேலும் நீடிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். இலங்கை அரசாங்கத்தின் போர்நிறுத்த அறிவிப்பை வரவேற்பதாகவும், புலிகளும் தற்போதைய தருணத்தில் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இராணுவ நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது. அதுமட்டுமின்றி அங்குள்ள மக்களையும் இடம்பெயர்ந்த மக்களையும் விடுவிக்க வேண்டியது விடுதலைப் புலிகளின் பொறுப்பு எனவும் வலியுறுத்தியுள்ளார். தேர்தலுக்காக அவரினால் இக்கருத்து கூறப்பட்டாலும் இலங்கைத் தமிழர் குறித்த கரிசனையில் இந்தியாவின் அக்கறை தற்போது சற்று கடுமையாக தென்படுகின்றமை வரவேற்க வேண்டிய விடயமாகும்.

அமெரிக்க தேர்தல் களத்தில் ஈராக் பிரச்சினை முன்னுரிமை வகித்ததைப் போல், இந்தியாவின் 15ஆவது மக்களவைத் தேர்தலில் ஈழத்தமிழர்கள் பிரச்சினை கடும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. மத்தியில் ஆட்சி நடத்தும் காங்கிரஸ் கட்சியும், தமிழகத்தில் ஆட்சி நடத்தும் தி.மு.க வும் ஈழத்தமிழர் பிரச்சினையில் வன்னி மக்களின் பாதுகாப்பு குறித்தும், பேச்சுகள் மூலமே தீர்வு எனற தொனியிலேயே அவாகளின் தேர்தல் பிரசாரம் அமைந்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அ.தி.மு.க, பா.ஜ. கட்சிகளின் தேர்தல் பிரச்சாரங்கள் சற்று வித்தியாசமாகவே அமைந்துள்ளது. பா.ஜ. கட்சியின் தேர்தல் அறிக்கையில் ஈழப்பிரச்சனைக்கு 100 நாட்களில் தீர்வு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.தி.மு.க கூட்டணியின் தேர்தல் அறிக்கையில், ஈழத்த மிழருக்கு தனி மாநிலம் அமைத்துக் கொடு க்க வலியுறுத்தப்படும் என்று குறிப்பிடப்பட டிருக்கிறது. இந்த இரு கட்சிகளின் அறிவிப்பு நடை முறைக்கு சாத்தியமாகுமா? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுகிறது. ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் பெரிய அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு எமது மக்களுக்கு ஆறுதலைத் தந்தாலும், அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு அந்தக்கட்சிகள் முன்நன்று உழைக்க வேண்டும். தேர்தல் கால வெற்றுப் பேச்சுகளாக இவை இல்லாமல் ஈழத்தமிழர்களுக்கு சுதந்திரத்தோடு வாழக்கூடிய தீர்வை பெற்றுத்தர ஆவண செய்ய வேண்டும் என்பதே எல்லோரினதும் பெரு அவாவாகும்.

பிரபு- ஆவரங்கால்

## திருமலை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

திருமலை மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக மீனவர்கள் பல விதமான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார்கள். மீன்பிடி கிராமங்களான திருமலை நகரத்தை அண்டிய பகுதி உட்பட சல்லி, சாம்பல் தீவு, குச்சவெளி, கும்புறுப்பிட்டி, கிண்ணியா, மூதூர், இலங்கைத்துறை, வெருகல் முகத்துவாரம். இப் பகுதிகளில் வாழும் மக்கள தங்களின் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கே மிகவும் கஷ்டப்படுவதை அவதானிக்க முடிகின்றது. 'எங்களை கடலுக்கு சென்று மீன்பிடிக்க விடுங்கள் அல்லது எங்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென்பதே" இவர்களின் கோரிக்கையாகவுள்ளது. இம் மக்களின் அன்றாட வாழ்க்கை மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. இவர்களின் கோரிக்கைகள் பல தடவை சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.. இதுவரை எந்தவிதமான பதில்களும் கிடைத்ததாக தெரியவில்லை.

யுத்த சூழ்நிலை ஏற்படுவதற்கு முன்பு மீனவர்கள் எவ்வித பிரச்சினைகளுமின்றி சுயமாக சென்று தங்களின தொழில்களை செய்தது போல் தமது தொழிலை செய்ய வேண்டுமென்று மக்கள் ஆவலுடன் இருக்கிறார்கள். திருமலை அரசின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதால் கடல்வலய தடைகளை அகற்றினால் தங்களின் மீன்பிடி தொழிலை சுயமாக செய்யலாமே என பதே மக்களின் அங்கலாய்ப்பு. அல்லது தற்போது கடலில மீன்பிடிப்பதற்குள்ள கட்டுப்பாடுகளை ஓரளவுக்கேனும் தளர்த்தி தொழில் செய்வதற்கு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.



யுத்த சூழ்நிலையில் மீன்பிடி உபகரணங்களை இழந்த மீனவர்களும் உளளனர். இவர்களின் இழப்பீடுகளை மதிப்பிட்டு மீண்டும் தாங்கள் தொழில் செய்வதற்கான உபகரணங்களை மீன்பிடி அமைச்சு மீன்பிடி சங்கங்களுடன் ஊடாக வழங்குவற்கான ஏற்பாடுகளை செய்துதர வேண்டுமென்று மீனவ மக்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

மீன்பிடி தடை காரணமாக மீன் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது எனவே இவ்விடயங்களுக்கெல்லாம் தீர்வு காண்பதானால் இவர்களுக்கான மீன்பிடித் தடைகளை இயலுமானவரை நீக்கி சுதந்தர்மாக இவர்களை தொழில செய்ய அனுமதிக்க வேண்டும்.

திருமலை சிவம்

## சிறுவர்களை கொல்லும் கலாச்சாரம்



திருமலையில் சிறுமி வர்ஷா படுகொலை நிகழ்ந்து சில வாரங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் மட்டக்களப்பில சிறுமி தினுஷகா கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டு பாழும் கிணற்றில் வீசப்பட்டிருக்கிறாள்.

நட்சத்திரங்களையும், செடிகளின் நடுவே பறக்கும் வண்ணாத்திப் பூச்சிகளையும், கடல் அலைகளின் நுரைகளையும் பார்த்து சிரித்து மகிழும் வெள்ளை உள்ளம் கொண்ட குழந்தைகளை கொல்லும் குரூரிகள் எமது சமூகத்தில் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழர் மத்தியில் தோன்றி வேர்விட்டு விழுதுவிட்ட வன்முறை கலாச்சாரத்தின் இளவல்களே இந்த படுகொலைகளை புரிகிறார்கள்.

பணத்திற்காக குழந்தைகளை கொல்லும், கடத்தும் ஜென்மங்கள் உருவாகியிருக்கின்றன. இந்த ஜென்மங்கள் சமூகத்திலிருந்து ஒழித்துக் கட்டப்பட வேண்டும். இதற்கு எமது நீதித் துறையும், சட்டம் ஒழுங்குத் துறையும் வீரியத்துடன செயற்படுவது மாத்திரமல்ல சமூகத்திலும் இது தொடர்பான பிரக்ஞை இருக்க வேண்டும்.

வர்ஷா படுகொலை செய்யப்பட்ட போது திருமலையே அதிர்ச்சியில் உறைந்தது. தினுஷ்கா கடத்தப்பட்டபோது மட்டக்களப்பு பெற்றோர்கள் வீதிக்கு இறங்கினார்கள்.

திருமலையில் இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டோர் தப்பிச் செல்ல முற்பட்டவேளையில் சயனைட் அருந்தியும் கொல்லப்பட்டதாக செய்திகள் வந்தன.

மட்டககளப்பில் தினுஷ்காவின் உயிரற்ற உடல் கிடந்த பாழும் கிணற்றருகே மூவரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவர்கள் இந்த காட்டுமிராண்டித் தனங்களில் சமபந்தப்பட்டவர்கள் எனகை கூறப்படுகிறது.

ஆனாலும் இவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு அம்பலப்படுத்தப்பட்டு பின்னணிகள் வெளிப்படுத்தப்பட்டு தண்டனைகள் பெறுவதே தார்மீக நெறி முறைகளுக்கு உட்பட்டதாகும்.

சூழல் மாசடைதல் போன்றவற்றிற்கெல்லாம் இயக்கங்கள் முன்னெடுப்பதை போல் இந்த சின்னஞ்சிறுசுகளை கொல்லும் காட்டுமிராண்டித் தனத்துக்கு எதிராகவும் விழிப்புணர்ச்சி இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி அதிகாரசபை சட்டமூலம் சிறுபான்மை இனத்தவர்கள் மத்தியில் அவநம்பிக்கையை உருவாக்கும்


**- த. சித்தார்த்தன்**

உள்ளூராட்சி அதிகாரசபை சட்டமூலம் குறித்து தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலை (புளொட்) தலைவர் த. சித்தார்த்தன் இந்த சட்டமூலமானது சிறுபான்மை இன மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. முழு உலகுமே இன்று இலங்கைத் தமிழ் மக்கள் குறித்தும் தமிழ்ப் பிரதேசங்களின் அதிகாரப் பரவல் தொடர்பாகவும் பேசிக் கொண்டிருக்கும் இந்த வேளையிலும் இன்றைய கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் தனக்கு மத்திய அரசாங்கம் முழுமையான அதிகாரத்தை இன்னும் தரவில்லையென்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் இந்சந்தர்ப்பத்திலும் இவ்வாறானதொரு சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்ள அரசாங்கம் முயற்சிப்பது கவலைக்குரியதாகும்.

அத்துடன் வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சராகவிருந்த அ. வரதராஜப்பெருமாள், இறுதியாக விடுத்த அறிக்கைக்கான பிரதான காரணம் என்னவென்பதும் நாம் அறிந்ததே.

தமிழ் மக்களுக்காக 13வது திருத்தச் சடடமொன்றை உருவாக்கியதன் மூலம் மாகாணசபை ஆட்சி முறைக்கு அடித்தளமிட்டு அதன் ஊடாக வழங்கப்பட்டுள்ள குறைந்த அதிகாரங்களையும் பறித்தெடுக்கும் செயலானது வருந்தத்தக்கது. இந்தச் சட்டமூலமானது நிறைவேற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுமாயின் இதன் பின்னர் தமிழ் மக்கள் நலன் தொடர்பில் அரசின் அக்கறை குறித்தான பிரச்சாரங்கள் அனைத்தும் பொய்யாகிப் போவதுடன் சர்வதேசமும் நம்பிக்கையை இழநது விடுமென்பது திட்டவட்ட உண்மை.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான இந்த



நாடாளுமன்ற குழுவில் சிறுபான்மை இன கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் (எம்.பி க்கள்) அங்கம் வகிக்கிறார்கள். ஆகவே இந்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே அவர்கள் தங்களது ஆலோசனைகளைத் தெரிவித்து தேவையான திருத்தங்களை செய்திருக்கலாமே ? என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் நானும் ஒரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரே. அதன் காரணமாக இது தொடர்பான எனது அனுபவத்தைச் சொல்லியாக வேண்டும். நாடாளுமன்றத்தினால் அமைக்கப்படும் ஒவ்வொரு துறை தொடர்பான குழுவினதும் கூட்டங்கள் நடைபெறும் போது அதில் அங்கம் வகிக்கும் எம்.பி க்கள் தொடராக இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை. இதுவொரு பாரிய குறைபாடு என்றுதான் நினைக்கிறேன். சட்டமூலங்கள் நாடாளுமன்றத்துக்கு வரும் போது அவர்கள் விழிக்கிறார்கள். இதுதான் இந்த விடயத்திலும் நடந்திருக்கலாமென்று ஊகிக்கிறேன.

சில அமைச்சர்கள் சிறுபான்மை கட்சிகள் தொடர்பில் அதிருப்தியான போக்கைக் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். சிறுபான்மை கட்சிகளின் பலத்தை உடைத்தெறிய வேண்டுமென்ற நோக்குடன் அவர்கள் செயற்படுகிறார்கள். சிறுபான்மை கட்சிகளின் பலத்துடன் பெரும்பான்மை கட்சிகள் ஆட்சி அமைப்பதனை அவர்கள் அவமானமாக கருதுகின்றனர். இந்தக் கட்சிகளின் உதவியுடன் மத்திய அமையக் கூடாதென்பதில் அக்கறை காட்டுகின்றனர். அவ்வாறானதொரு தேர்தல் முறையின் கீழ் சிறுபான்மை கட்சிகளையும் சிறுபான்மையின பிரதிநிதித்துவத்தையும் குறைத்து பலமிழக்கச் செய்துவிடலாம் அல்லது முற்றாக இல்லாமல் செய்துவிடலாமென்ற நம்பிக்கையின் வெளிப்பாடான வெள்ளோட்டமே இந்த உள்ளூராட்சி அதிகாரசபை சட்டமூலம்.

இந்த உள்ளூராட்சிசபை அதிகார சட்டமூலம் தொடர்பில் த.தே.கூ வாய் திறக்கவில்லை. இது கவலைதரும் விடயமாகும். தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் எனத் தம்மை மார்தட்டிக் கொண்டால் மட்டும் போதாது தமிழ் மக்கள் பால் உண்மையான அக்கறையையும் அவர்கள் செலுத்த வேண்டும்.

சகல சிறுபான்மை கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஜனாதிபதியின் கவனத்துக்கு இதை ஏற்கனவே கொண்டு வந்திருந்தால் இந்த பிரச்சினைக்கு சில வேளைகளில் சாதகமான தீர்வை கண்டிருக்கலாம் என தான் நம்புவதாக குறிப்பிட்டார்.

# வன்னியில் எஞ்சியுள்ள இடம் பெயர்ந்தோரை காப்பாற்று ங்கள்

இலங்கை ஓர் தேசமாக தனது நாணயத்தைக் இழக்காது காப்பாற்றக் கூடிய வகையில் தங்களில் உடன் நடவடிக்கைக்காக நான் கவலையடையும் சில விடயங்களை முன்வைக்க விரும்புகிறேன். நாட்டில் பயங்கரவாதத்தை ஒழிக்கும் தங்கள் நடவடிக்கைகளுக்கு எனது உயிருக்கு பெரும் அச்சுறுததல் இருநதுங்கூட எனது முழு ஒத்துழைப்பை தங்களுக்கு நல்கி தங்களை தப்பாக என்றும் நான் வழி நடத்தவில்லை. நான் ஆதாரமற்று கேள்விப்படுவனவற்றையோ, அல்லது பற்ர் கூறும் அனைத்தையுமோ முற்று முழுதாக நம்புகிறவன் அல்ல.

இன்றும் வன்னியில் அகப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒன்றரை இலட்சத்துக்கு மேல் இருக்கின்றனர் என்று நம்பகமான செய்தி கிடைத்திருக்கின்ற போதும் நிச்சயமாக ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் இருக்கின்றனர் என்பதை நான் நம்புகின்றேன். முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் எனது எண்ணிக்கை சரியானதென நிருபணமானதை தாங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். துரதிஷ்டவசமாக விமானத்தாக்குதல் நிறுத்தப்பட்டுள்ள போதிலும் கடந்த மூன்று நாட்கள் தொடர்ந்து செல், ஆட்டிலறி தாக்குதல்கள் தொடர்கின்றன. அவற்றை உடன் நிறுத்தி அப்பாவி பொது மக்களை காப்பாற்றுங்கள்.



நான் சுட்டிக்காட்ட விரும்பும் ஒரு விடயம் யாதெனில் யுத்த நடவடிக்கைகள் பல இடம்பெயர்ந்தோரை கடும் பாதிப்புக்குள்ளாக்கும் அதேவேளையில் நலன்புரி நிலையங்களுக்கு தப்பி வந்துள்ளவர்களை பெரும் பயத்துக்கும் பீதிக்கும் உள்ளாக்குவதோடு அவர்களின் உறவுகள் பலர் இன்னும் வன்னியில் இருப்பதால் அவர்களுக்கு பெரும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தும். ஒவ்வொரு உயிரும் பெறுமதிமிக்கதால அப்பாவி மக்களின் உயிர்களை என்ன விலை கொடுத்தேனும் பாதுகாக்க வேண்டிய பாரிய கடமை தங்களுக்குண்டு. நான் முன்பு தங்களுக்கு எழுதியது போல சில விடயங்கள் வெளியுலகுக்கு தெரியவரும் போது நம் நாடு சர்வதேச சமூகத்தால் பெரும் கண்டனத்துக்குள்ளாகும்.

வன்னியில் பெரும் உணவுத் தட்டுப்பாடு மக்கள பட்டினியால் வாடுமள வுக்கு ஏற்பட்டுள்ளது. சித்திரை மாதம் 2ம் திகதி 1100 மெற்றிக் தொன் உணவு அங்கே அனுப்பப்பட்டதன் பின் 28ம், 29ம் திகதிகளில் தினம் 30 மெற்றிக் தொன் உணவே சென்று ள்ளது. இந்த இரு நாட்களிலும் அவர் களுக்கு தினம் கிடைத்துள்ள சீனி 1000 கி.கி மட்டுமே. ஆகவே தயது செய்து உடன் தேவைப்படும் உணவு, மருந்து வகைகளை அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இக் கடைசி நேரத்திலும் கூட நான் கூறும் ஆலோசனை தங்களுக்கு ஏற்புடையதாயின் அதை அமுல்படுத்த முயற்சியுங்கள். எனது ஆலோசனை யாதெனில் அரசுக்கு ஏற்புடையதான ஓர் சர்வதேச அமைப்பை வன்னிக்கு அனுப்பி மக்களை விடுவிக்குமாறும், ஆயுதங்களுடன் சரணடைபவர்களுக்கு பொது மன்னிப்பு கொடுப்பதாகவும் கூறி அனுப்பி வையுங்கள். இதற்குத் தேவையான இருவார காலக்கெடுவும் கொடுக்கலாம். பொது மக்களை வெளியில் கொண்டுவர அத்தகையதோர் ஏற்பாடு செய்யத் தவறின் முடிவில் நாட்டின் நற்பெயரை நாசம் செய்யும் ஓர் பாரிய அனர்த்தம் தேசிய ரீதியில ஏற்படவும் கூடும்.

திரு.வீ. ஆனந்தசங்கரி அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்

# யுத்தத்தால் காயமடைந்த சிறுவர்களுக்கான கற்றல் நடவடிக்கை

காயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கும் சிறுவர்களுக்கான வேலைத்திட்டத்தினை மன்னார் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (Save The Children) முன்னெடுத்து வருகின்றது.

வன்னி பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் படை நடவடிக்கைகள் காரணமாக அப்பகுதிகளில் இருந்து காயமடைந்த நிலையில் திருகோணமலை, வவுனியா மற்றும் மன்னார் வைத்தியசாலைகளுக்கு ஆயிரக்கணக்கானவர்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட 18 வயதிற்கு உட்பட்ட சிறார்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு மன்னார் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதியம் மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் தற்காலிக கூடாரங்களை அமைத்து கறறல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

ஆண்டு 1 தொடக்கம் உயர்தரம் வரை மாணவர்களுக்கான கற்பித்தலுக்கென மனனார் வலய கல்விப பணிமனையினால் ஆறு நிரந்தர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதோடு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் நான்கு தொண்டர் ஆசிரியர்களும் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருக்கின்றனர்.

நாளாந்தம் காலை 8.30 - 12.00 மணிவரை கற்றல் நடவடிக்கைகளும் பிற்பகல் 2.00 - 5.00 மணி வரையான இவர்களுக்கு விளையாட்டு நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் (DCDC) வேண்டுகோளுக்கமைய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மன்னார் மாவட்ட அலுவலகம் மேற்படி செயற்திட்டத்தினை அமுல்ப் படுத்தி வருகின்றது.

-துருவமண்

# இடம்பெயர்ந்த மக்களுக்கு பணியாற்ற தொண்டர்களுக்கு சிறப்பு பயிற்சி


வன்னியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் பணியாற்றுவது தொடர்பாக சர்வோதயத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் சர்வோதயத்தினால் இரண்டுநாள் பயிற்சி கருத்தமர்வு நடாத்தப்பட்டது இதில் முப்பதுக்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டு முதற்கட்ட பயிற்சிகளை நிறைவு செய்தனர்

இரண்டு தினங்கள் இடம் பெற்ற முதற்கட்ட பயிற்சி நெறியில் உணவு, அடிப்படை சுகாதாரம், இருப்பிட வசதிகள், மருத்துவம் மற்றும் நீர்வடிகால் அமைப்பு முறைகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பன உள்ளடங்கலாக இடம்பெயர்ந்தோர் மட்டில் பணியாற்றும் பணியாளர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கு செயல்முறை பயிற்சிகள் வழங்கப்பட்டது. விளக்கமளிக்கப்பட்டிருக்கின்றது.

இக் கருத்தமர்வுக்களிலும் சர்வோதயத்தின் தலைமையக உயர் அதிகாரிகள் இருவரும் மன்னார் மாவட்ட இணைப் பாளர் எஸ். யுவேந்திரன் மற்றும் திட்ட இணைப்பாளர் கிருஷ்டின்ராஜ் ஆகியோர் பயிற்சியை நெறிப்படுத்தினர்

துருவமண்

# வரலாற்றுத் துரோகங்களுக்கு நீண்டதோ, குறுகியதோ ஆன காலத்தில் விலை செலுத்த வேண்டியிருக்கும்



டெலோ இயக்கத்தின் நூற்றுக்கணக்கான போராளிகளும் அதன் தலைவரான ஸ்ரீ சபாரட்ணம் அவர்களும் படுகொலை செய்யப்பட்டு 23 ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

இவர்கள் பாசிச புலிகளால் படுகொலை செய்யப்பட்டபோது அதற்கு நியாயம் சொன்னவர்களும், ஆரவாரித்தவர்களும் எமது சமூகத்துக்குள் இருந்தார்கள். எமது சமூகத்தினுள்ளே புதைந்திருந்த காட்டுமிராண்டித்தனம் மிகக் குரூரமாகவும், சர்வசாதாரணமாகவும், வார்த்தைகளாக வெளிப்பட்டன.

எமது சமூகத்தின் புதல்வர்களை படுகொலை செய்தவர்களுக்கு, குற்றுயிரும், குறை உயிருமாக எரித்தவர்களுக்கு கொக்கோ கோலா வழங்கிய போது 2007 மார்ச் 30 இல் ஈ.பி.ஆர். எல்.எப், புளொட், டெலோ போராளிகள் நல்லூர் கந்தன் கருணை இல்லத்தில படுகொலை செய்யப்பட்டபோது மௌனமாக எமது சமூகம் இதையெல்லாம ஆதரித்தது.

ஊடக அறநெறிக்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாத தமிழ் பத்திரிகைகள் புலி பாசிசம் வழங்கிய மனித மண்டை ஓட்டிலிருந்து அமுதபானம் அருந்தின.

1986 ஏப்ரல் மாதங்களில் நடந்த குரூரங்களுடன் ஈழப் போராட்டம் பற்றிய பெருவாரியான மக்களின் நம்பிக்கைகள் தகர்ந்து போயின. அதன் பின் ஒன்றன் பின் ஒன்றாக இறுதிவரை சகோதரப் படுகொலைகள் நடந்தேறின.

ஒரு போராட்டம் மனித குலத்தின் நியாயமான நேர்மையான அபிலாசைகளுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். தனி மனித வழிபாடு ஏகபிரதிநிதித்துவ அகங்காரம் மக்களை புறந்தள்ளிய மேலாண்மை யாரையும் எங்கேயும், எப்படியும் கொல்லலாம், நடத்தலாம் என்ற கயமைத்தனம் வரலாற்றுத் துரோகம். இறுதியாக புதுமாத்தளனை கடந்து முள்ளிவாய்க்காலில் நிற்கிறது.

பெரும்படைகள், இராணுவ வெற்றிகள் எல்லாவற்றையும் விட போராட்டத்தின் அறம் என்பதே மேன்மையானது என்பது வரலாற்றால் நிருபிக்கப்பட்டுள்ளது.

போராட்ட வரலாற்றில் சமூகத்திற்கெதிராக மானிட தர்ம நெறிமுறைகளுக்கு எதிராக தவறுகள் இழைத்தால் நீண்டதோ, அல்லது குறுகிய காலத்தில் அதற்கான விலையை செலுத்த வேண்டியிருக்கும். இதனை இனியாவது நாம் உணருவோமா.

புலிகளால் படுகொலை செய்யப்பட்ட டெலோ தலைவர் ஸ்ரீ சபாரட்ணம் மற்றும் போராளிகள் அனைவருக்கும் எம் இதய அஞ்சலிகள்.

[illegible]

# வன்னி மக்களை.......

03ம் பக்கத் தொடர்ச்சி

போல் சநதேக பேர்வழிகள் போல் நடாத்த முடியாது.

இதேவேளை தமது பிராந்தியத்தில தமிழர்கள் தாமே தமது அலுவல்களை பார்க்கிறார்கள் என்று திருப்திப்படுமளவிற்கு மனதளவில் உணர்வுகள் ஏற்படுமளவிற்கு அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அவ்வாறே முஸ்லீம் மக்களுக்கும் மலையக மக்களுக்கும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது பல்லினங்களின் தேசம் என்பது நடைமுறையில் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஸ்தாபிக்கப்படுகையில் இங்கு எத்தகைய வன்முறைகளுக்கும் இடமிருக்கப் போவதில்லை.

இன்று வனனியில் அகப்பட்டிருக்கும் மக்கள் இந் நாட்டின் மக்கள் என்ற உந்துதல் உணர்வுடன் காரியங்கள் ஆற்றப்பட வேண்டும். மற்றவர்கள் செய்யாத பரோபகாரத்தை நாம் செய்கிறோம என வேறு நாடுகளில் நடக்கும் சம்பவங்களுடன் இதனை ஒப்பிட கூடாது. எமது மக்கள் எம்மில் ஒரு பகுதியினர் என்ற உணர்வுடன் இந்த மனிதப் பேரவலத்தை முடிவுக்குக் கொண்டுவர முயலவேண்டும்.

தி. ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளறுவாயன்

கனநாளா காணேல்லை எண்டதாலை கடத்தப்பட்டவை, காணாமற் போனவையின்ரை லிஸ்டிலை என்னையும் சேர்த்துப்போடாதையுங்கோ.

என்னையும் கடத்திக்கொண்டு போறதுக்கு ட்ரை பண்ணினவை சுழிச்சுக்கொண்டுதான் வாறன்

எங்கடை எம்பிமார் தங்கடை அலுவலுக்கு உலகமெல்லாம் சுத்திப்போட்டு தமிழர் பிரச்சினையை உலகறிச் செய்யிறதுக்கு போனதா ஒரு கயிறு விடுகினமெல்லே அந்த மாதிரி நானும் ஒரு புலுடா விடுவம் எண்டுதான் யோசிச்சனான்.

தமிழ் தலைவர்மார் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் போய்வந்து தமிழர் பிரச்சினை பற்றி பிரச்சாரம் செய்யப் போனம் எண்டு மேடையில் நிண்டு முழங்கிறதை கேட்டு புல்லரிச்ச காலங்கள் இருந்தது என்னவோ உண்மைதான் இப்ப வெள்ளைக்காரன் எங்கடை வீட்டு வாசலுக்கை வந்து நிக்கேக்கை இவை ஏன் உலகம் முழுக்க அலையினம் எண்டெல்லே, கொஞ்சம் விளப்பமுள்ளவை கேக்கினம். இலங்கை முழுக்க வந்து நிக்கிற ஐ.என்.ஜீ.ஓ வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களைப் பற்றித்தான் சொல்லுறன். வருமானம் இல்லாத எங்கடை சனங்களுக்கு கோழிக்குஞ்சுகள் குடுத்து, வளக்கிறதுக்கு கூடும், வளரும் வரைக்கும் தீனும் குடுக்க வீடு தேடி வருகினம். வீடு வாசலை திருத்திக்குடுக்கினம், கட்டிக்குடுக்கினம் அவைக்கு தமிழ் சனத்தின்ரை பிரச்சினை தெரியாமலே இருக்கும். சமாதானம் எண்டு போட்டு புலியள் செய்த திருகுதாளங்களையும் ஓரக்கண்ணால பாத்துத்தானே இருப்பினம். பிறகு அவைக்கு விளங்கப்படுத்த என்ன இருக்கு. சரி, நீ எங்கையப்பா போனாய் என்று நீங்கள் கடுப்பாகிக் கேக்கிறது எனக்கு விளங்குது நான் எங்கையப்பா போறது விவேக் தண்ணியாலை கண்டம் எண்டு அலைஞ்சு திரிஞ்ச படம் பாத்திருப்பியள். எனக்கு வாயாலை கண்டம் வந்திடக் கூடாது எண்டு அடக்க ஒடுக்கமா இருந்திட்டன். நாட்டு நிலைமை தெரியும் தானே ஏறச்சொன்னா எருதுக்கு கோபம் இறங்கச் சொன்னா முடவனுக்கு கோபம் எண்டது மாத்திரமில்லை வண்டிலலை கூடவாறவை, வழியிலை போறவைக்கும் கோபம் வராம பாத்துக்கொள்ள வேண்டிக்கிடக்கு எனக்கோ ஆக்களைக் கண்டா வாய் சும்மா கிடவாது இசகு பிசகா ஏதேனும் கதைச்சு வில்லங்கத்தை விலைக்கு வாங்கிப் போடக்கூடாது எண்டதாலை தான் தலையை காட்டேல்லை. ஊரைவிட்டு போட்டன் எண்டு நினைச்சுப் போடாதையுங்கோ. வாய்க்குத்தான் பூட்டு. நடக்கிற கூத்துகளை பாத்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் தான் இருக்கிறன்.

சரி விண்ணாணத்தை விட்டுப்போட்டு விசயத்துக்கு வாறன் வன்னிலை இருக்கிற எங்கடை சனத்தின்ரை பாடு அல்லோலகல்லோலம். செத்ததும், காயப்பட்டதும், வயித்துக்கு இல்லாததும் எண்டு கஷ்டத்தை சொல்லி முடியாது. அரசாங்கம் சாப்பாடு குடுக்குதில்லை. கப்பலிலை சாமானுகள் அனுப்பபோறம் எண்டு கொஞ்சப்பேர் குத்தி முறியினம். குளம் இருக்கிற இடத்துக்கு குதிரையை கொண்டுபோறதுக்குப் பதிலா குதிரை நிக்கிற இடத்துக்கு குளத்தை கொண்டுவாறதுக்கு நிக்கினம். குதிரையளோடை சேர்த்து புலிக்கும் தண்ணியை பருக்கிப் பாப்பம் எண்டு யோசிக்கினம் போல.

அது வேற ஒண்டுமில்லை இப்ப வெளிநாடுகளிலை இருக்கிற இளசுகளை வைச்சுத்தான் காணாந்தி காட்டப்பாக்கினம். பழம் திண்டு கொட்டை போட்ட பெரிசுகள் எல்லாத்துக்கும் எடுபடமாட்டினம் எண்டதாலை இப்ப கொஞ்சம் விடலையளைத்தான் உசுப்பேத்தி விட்டிருக்கினம். பொறுத்தது போதும் பொங்கியெழு தலைவா போருக்கு என்று பொங்கினவைக்கு பின்னாலை நிண்டதும், இப்ப போரை நிறுத்து என்று துள்ளுறவைக்கு பின்னாலை நிக்கிறதும் ஒரே சூத்திரதாரியள் எண்டதை தெரிஞ்சவை யோசிக்கத்தானே செய்வினம்.

அங்கையே பிறந்து அங்கையே வளந்ததுகளுக்கு இஞ்சை இருக்கிற சனம் பட்டபாடும், படுகிற பாடும் எங்க தெரியப்போகுது.

கிரிக்கெட் விளையாட்டை பாத்து விசிலடிச்சதுகள், கொடிபிடிச்சதுகள் மாத்தளனில் சிக்குப்பட்ட சனங்களின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கின்ற சண்டையையும் விளையாட்டாய் நினைத்து கொடிபிடிக்குதுகள். அவைக்கு கொடியா தெரியிறது சனத்துக்கு கொடியதா போன விஷயம தெரியாம விளையாடுகினம். பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது என்ட கதைதான்.

சமாதானம் எண்டு சொல்லிக்கொண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு படிக்க வந்த பொடி பொட்டையளை வைச்சு மறியல், பேரணி எண்டு ஆமிக்கும் பொலிசுக்கும் கல்லாலை எறிஞ்சவை. இப்ப வெளிநாடுகளிலை உள்ள இளசுகளை வைச்சு தூதரகங்களுக்கு கல்லு எறியினம். உள்ளுரிலை வாய் வீரம் பேசி கல எறிய வைச்சவை கம்பி நீட்ட கல்லாலை எறிஞ்சவை பின்னாலை அவஸ்தைப்பட்டது போல வெளிநாடுகளிலை தஞ்சமடைஞ்சு இருக்கிறவையையும் அவஸ்த்தைப்படுத்த அலுவல் பாக்கினம்.

மனசார வன்னியிலை சிக்குப்பட்ட சனத்தை நினைச்சு கண்ணீர் விடுறவை எல்லா இடத்திலையும் இருக்கினம் அவையை கொச்சைப்படுத்தக் கூடாது. ஆனால், ஆராயிருந்தாலும் ஏன் இந்த நிலைமை, ஆராலை வந்தது எண்டதையும் கொஞ்சம் திங் பண்ணத்தானே வேணும்.



மாத்தளனிலை சிக்குப்பட்டிருக்கிற சனத்தை வெளியாலை விடுங்கோவன் பாவம் கூடாரங்களுக்குள்ள கிடந்து வேகுதுகள், செல்லடிக்குள்ளை கிடந்து சாகுதுகள் எண்டு கேட்டா மக்கள் அவையின்ரை பாரம்பரிய வாழிடத்தில தான் இருக்க விரும்புகினம் எண்டு தங்கடை பிள்ளையளை பாதுகாப்பான இடத்திலை கொண்டு போய் விட்டிட்டு வந்து படிப்புக்கும் ஏற்பாடு பண்ணிப்போட்டு வந்திருக்கிற புலியளின்ரை அப்புக்காத்துமாரெல்லே நியாயம் சொல்ல வருகினம். நீங்கள் சொல்லுற இரண்டரை இலட்சம் சனமும் மாத்தளனிலை பிறந்து வளந்ததுகளோ எண்டு இவையிட்ட யார் கேக்கிறது?

சனங்களை வவுனியாவிலை உள்ள முகாம்களுக்கு கொண்டு போகாமல் அவை அவையின்ரை சொந்த இடங்களுக்கு விட வேணும் எண்டும் கேக்கினம். எறிஞ்சதுகள், தாட்டதுகள் ஆமியின்ரை கையிலை அம்பிட முதல் சனத்தோட சனமா போய் அலுவலை குடுக்கிறதுக்கு வழி தேடுகினம் போல. அவை கொரில்லாக்களா இருந்தாத்தானே ஏழை, எளியதுகளின்ரை பிள்ளையளை மாவீரர்கள் ஆக்கி இவை கொஞ்சப் பேர் அரசியல் நடத்தலாம், சம்பாரிக்கலாம்,

இன்னும் நிலைமை சீராகேல்லை கனக்க கதைக்கப்படாது சந்திப்பம் பிறகு வாறன் போட்டு.

# அத்துமீறிய குடியேற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டும்

**இரா. துரை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எல்லைக் கிராமமான கிராமசேவையாளர் பிரிவு இல 135சி கெவுளியாமடு கிராமத்தில் 1990ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தில் 106 குடும்பங்கள் இடம்பெயர்ந்து களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவில் உறவினர்களின் வீடுகளில் பல வருடங்களாக வாழ்கின்றனர்.

இவர்களில் அனேகமானோர் வேளாண்மை, மீன்பிடி, மேட்டுப் பயிர்ச்செய்கை, வியாபாரம் கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களை செய்து வந்ததோடு விவசாயம் செய்யக்கூடிய வயல் நிலங்களுக்கும் மேட்டு நிலங்களுக்கும் உரித்துடையவர்கள்.

18 வருட காலமாகியும் இங்கு நிலவி வந்த யுத்த சூழ்நிலை காரணமாக உயிருக்குப் பயந்து மீண்டும் சொந்த கிராமததிற்கு போக முடியாமல எப்போது ஊர் திரும்புவோமென ஆவலோடு காத்திருக்கின்றனர். இவர்கள் இடம்பெயர்ந்தபோது அனைத்து வாழவாதாரங்களை இடந்துவிட்டனர்.

தற்சமயம் இப் பிரதேசத்தில் இருந்த வீடு வாசல்கள் அழிக்கப்பட்டு பயிர்ச்செய்கை நிலங்கள் காடாக காட்சியளிப்பதோடு சில வயல் நிலங்களில் வேளாண்மை - சேனைப் பயிர்ச்செய்கை செய்யப்பட்டும், சில நிறுவனங்களால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டும் ஓரிரு குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கும் இப்பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை. கடந்த வாரம் இப் பிரதேசத்தை பிரதேச செயலாளர் தலைமையில் பார்வையிடச் சென்றபோது அத்துமீறிய குடியேற்றம் என தெரியவந்தது குறிப்பிடத்தக்கது.

எனவே அரசாங்கம் தமிழ் மக்கள் வாழ்ந்த கெவுளியாமடு கிராமத்தில் நடக்கின்ற அத்துமீறிய குடியேற்றத் திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும்.

தற்காலிகமாக மேற்பார்வை செய்வதற்காக இக் கிராம சேவையாளர் பிரிவு உகனை பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதை மீண்டும் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கவும் நடவடிக்கை எடுப்பதோடு இப் பிரதேச மக்கள் மேற்படி பிரதேசத்திற்கு மீண்டும் சென்று தங்களது விவசாய செய்கையை மேற்கொள்வதற்கும் இதைத் தொடர்ந்து இவர்களுக்குச் சொந்தமான காணாமல் போன கால்நடைகளுக்குப் பதிலாக கால்நடைகளை வழங்கி மீண்டும் தங்கள் தொழிலை ஆரம்பிப்பதற்கும் இக்கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்தோர் இப்பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பதற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பதோடு இவர்கள் நிரந்தரமாக இப்பிரதேசத்தில் வசிப்பதற்கு வீட்டுத் திட்டத்தை ஒரே இடத்தில் கட்டிக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இரா.துரைரெத்தினம்(ரட்ணம்) கிழக்கு முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# நினைவு கூர்கிறோம்

**தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கான போராட்டத்திற்கு தம்மை அர்ப்பணித்து மே மாதத்தில் உயிர் நீத்த தோழர்கள் இவர்கள். அவர்களின் உழைப்புக்களும், தியாகங்களும் வீண்போகாது அவர்களது பணிகளையும், நம்பிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு இத்தோழர்களுக்கு எமது அஞ்சலியை செலுத்தி நினைவு கூருகின்றோம்.**

| முழுப்பெயர் | கட்சி பெயர் | முகவரி | இறந்த திகதி |
|---|---|---|---|
| செ.செல்வராசா | சின்னவன் | கந்தளாய் | 03.05.1985 |
| கோவிந்தபிள்ளை சுந்தரலிங்கம் | வேலு | கல்லாறு | 03.05.1985 |
| ரி விஜயகுமார் | கணேஸ் | காரைதீவு -01 | 03.05.1985 |
| மதிவதனி | ஷோபா | யாழ்ப்பாணம் | 03.05.1985 |
| | விஜயன் | யாழ்ப்பாணம் | 03.05.1985 |
| | அரவிந்தன் | காரைநகர் | 03.05.1985 |
| சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் | பாலா | பிரதான வீதி, வந்தாறுமூலை | 31.05.1985 |
| ஏ. தேவநாதன் | நிர்மல் | மண்டூர், மட்டக்களப்பு | 10.05.1985 |
| கே. சுந்தரலிங்கம் | | பெரியகல்லாறு | 05.05.1987 |
| எஸ். கோபாலநிதி | நிதி | பேத்தாளை | 15.05.1987 |
| ரி. யோகராஜா | சின்னசூரி | வந்தாறுமூலை | 28.05.1989 |
| ஜே. தேவராஜன் | சுரேஸ் | காயங்கேணி | 28.05.1989 |
| முத்துலிங்கம் கணேசகுமார் | ராசிக் | வாசிகசாலை வீதி, காரைதீவு | 29-05-1999 |
| | தேவா | ஆரையம்பதி | 10.05.1986 |
| சாம் தம்பிமுத்து | | புளியந்தீவு | 07.05.1990 |
| கலா தம்பிமுத்து | | | |
| பாக்கியராசா தர்மலிங்கம் | தருமலிங்கம் | மண்டூர் 01 | 10.05.1985 |
| | ஸ்டீபன் | பலாலி | 19.05.1986 |
| கந்தசாமி சிறிதரன் | கங்கா | காங்கேசன்துறை 28.05.1964 | 19.05.1986 |
| ந. சந்திரதாஸ் | | இணுவில் | 16.05.1990 |
| யேசுராஜா ராஜ்குமார் | | 41, முத்தமிழ் வீதி யாழ்ப்பாணம் | 11.05.1990 |
| வேதரத்தினம் சிவராசா | ரமேஸ் | சபாபதிபிள்ளை வீதி சுன்னாகம் | 01.05.1990 |
| அண்ணாமலை சூரியகுமார் | சந்திரன் | 55, பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணம் | 15.05.1990 |
| பாலசிங்கம் சன்னதிராஜா | | பருத்தியடைப்பு 23.06.1960 | 04.05.1988 |
| உதயகுமார் | நாதன் | கந்தளாய் | 16.05.1986 |
| பிறேமன் | சின்னவன் | நிலாவெளி | 16.05.1986 |


தோழர் சின்னவன்


தோழர் வேலு


தோழர் ஷோபா


தோழர் கணேஸ்


கலா தம்பிமுத்து


சாம் தம்பிமுத்து

**இம் மாதத்தில் உயிர் நீத்தவர்களில் எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை இங்கு பிரசுரித்துள்ளோம். இங்கு பிரசுரிக்க தவறிய தோழர்கள் பற்றிய விபரங்கள் தெரிந்திருந்தால் அவற்றை அனுப்பிவைத்து உதவுமாறு கேட்டுக்கொள்வதுடன் இங்கு நினைவு கூரப்பட்ட தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்துவதற்கும் அவர்களது படங்கள் அவர்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் அவற்றை எமக்கு அனுப்பி உதவுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தினை நிராகரிக்க கோரும் பிரேரணை மட்டக்களப்பு மாநகர சபையில் ஏகமனதாக நிறைவேறியது



உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தினை நிராகரிக்க கோரும் பிரேரணையின் மீது மாநகர முதல்வர் சிவகதா பிரபாகரன் உரையாற்றுகையில் இன்று இவ் விடயமானது எமது சிறுபான்மை சமூகத்தில் அரசியலில் பாரிய தாக்கம் செலுத்தும் காரணியாக அமைந்துள்ளது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் அமைச்சர் தினேஷ்குணவர்த்தன வினால் உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) என்ற தலைப்பில் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக இந்த சட்டமூலம் முன் வைக்கப்பட்டது. அதன் பின்னர் இந்த சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செயயப்பட்டது. இந்த வழக்கின் முடிவினை அறிவித்த உயர் நீதிமன்றம் நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில இருந்து இதனை உடனடியாக நீக்கு மாறும் தேவையாயின் மாகாண சபைகளின் அனுமதியை பெற்று பின்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் தெரிவித்திருந்தது. இதேவேளை இந்த சட்ட மூலம் அனைத்து மாகாண சபைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே நாடாளுமன்றத் திற்கு கொண்டு வர முடியும் என்றும் ஒரு மாகாணசபை நிராகரித்தால்கூட இதனை நிறைவேற்ற முடியாதென்பதுமே நியதியாகும். இன்று இந்த நிர்ணயிக்கும் சகதியாக எமது கிழக்கு மகாணசபை விளங்குகின்றது.

குறிப்பிட்ட இந்த உள்ளூராட்சி அதிகாரசபைகள (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலமானது அமுல்படுத்தப்படுமாயின் சிறுபான்மை சமூகம் பின்வரும் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டிவருமென அரசியல் ஆய்வாளர்கள் ஆணித்தரமாக கருத்தைத் தெரிவித்தனர்.

இந்தத் திருத்தச் சட்டத்தின் கீழ் ஒரு பிரதேச சபைத் தேர்தல் நடாத்தப்படுமாயின் 70சத வீதமான உறுப்பினர்கள வட்டார ரீதியாக அதாவது தொகுதி வாரியாகவும் 30 சத வீதமான மக்கள் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறான முறையில் நடாத்தப்படும் உள்ளூராட்சி தேர்தலில் நிச்சயமாக சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவம் குறைவடையும்.

இரண்டாவது வட்டார எல்லைகள் தொடர்பான திருத்தம் மற்றும் புதிய வட்டார எல்லைகளை தீர்மானிக்கும் பொறுப்புக்கள் என்பவற்றை அமைச்சர் ஒருவருக்கே இந்தத் தேர்தல் திருத்தச் சடடத்தின் மூலம் வழங்குகின்றது. இதற்கு அமைய வட்டார எல்லைகளைத் தீர்மானிக்கும் பூரண அதிகாரம் அந்த அமைச்சருக்கு வழங்கப்படும். இவ்வாறு மேற்படி தீர்மானத்தை மேற்கொள்ள நியமிக்கப்படும் அமைச்சர் ஒரு கட்சியை சேர்ந்தவராகவே இருப்பார். இப் பொறுப்பானது பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த ஒரு அமைச்சருக்கே வழங்கப்படும் என்றும் அவர் எவ்வளவு தூரம் சிறுபான்மை மக்களின் நலன் பாதிக்காதவாறு வட்டார எல்லைகளை மீளமைப்பார் என்ற சந்தேகம் வெளியிடப்படுகின்றது. அதாவது தமிழர் அல்லது முஸ்லீம்கள் வாழக்கூடிய ஒரு சிறு பிரதேசத்தினை ஒட்டியதாவே சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசம் ஒன்றில் வட்டார எலலைகள் மீளமைக்கும் வகையில் அவை பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு (உதாரணமாக வட்டாரம்1, வட்டாரம்-2,வட்டாரம்-3) அவற்றின் சில வட்டாரங்கள் குறிப்பிட்ட தமிழ் அல்லது முஸ்லீம் பிரதேசத்துடன இணைக்கப்பட்டால் அங்கு சிறுபான்மை இன மக்களின் பெரும்பான்மை பலம் இழக்கப்படுவது தவிர்க்க முடியாது போகும். இதன் வாயிலாக சிறுபான்மை மக்களின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதித்துவத்தின் அதிகரிதத எண்ணிக்கை இல்லாதொழிக்கப்படும். எல்லை நிர்ணய சபை ஒன்றினை அமைத்து அதன் ஊடாக பொது மக்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு மக்களின் பங்களிப்புடன் எல்லைகள் தீர்மானிக்கப்படும் பாரம்பரியம் இச் சட்டமூலத்தின் மூலம் பறிக்கப்படுகின்றது.

மூன்றாவது பாதிப்பு யாதெனில் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் வாதாடி நீக்கிக் கொண்ட 12.5 வீத வெட்டுப் புள்ளியும் இந்த உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலத்தினால் மீண்டும் சேர்க்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட மூன்றும் சிறுபான்மை சமூகத்தின் அரசியலில் எதிர் மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் காரணிகளாக அரசியல் அவதானிகளால் இனம் காணப்பட்டுள்ளன. இந்த சட்டமூலம் அமுல்படுத்தப்படுமாயின் இனங்களுக்கிடையே நிலவும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் குழி தோண்டி புதைக்கப்படும் என்று பலராலும அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

நாளை கிழக்கு மாகாணசபை இந்த சட்டமூலம தொடர்பில் என்ன தீர்மானத்தை மேற்கொள்ள போகின்றது என்று முழு இலங்கையுமே ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. சிறந்த முதலமைச்சரையும், சிறந்த உறுப்பினர்களையும் கொண்டுள்ள எமது கிழக்கு மாகாண சபை விவேகமான முடிவினை எடுப்பார்கள் என்பது பலரதும் திட நம்பிக்கையாகும். இத் தருணத்தில் எமது தமிழ் பேசும் சமூகத்துடன் தொடர்புபட்ட ஒவ்வொரு விடயத்திலும் கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று குரல் கொடுத்தும் செயற்பட்டு வரும் எமது இந்த மேலான மாநகர சபையானது இவ்விடயம் தொடர்பில் விரிவாக பரிசீலித்து ஆழமாக சிந்தித்து எமது சிறுபான்மை மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு குந்தகம் விளைவிக்காதவாறு ஒரு சிறந்த விவேகமான முடிவினை எடுக்க வேண்டிய கடமைப்பாட்டில் உள்ளது. தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மேலான சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நாம் நிச்சயமாக இவ் விடயம் தொடர்பில் அவர்களது நலன் பாதிக்காத வகையில் ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பில் உள்ளோம் என்பதையும் நாம் இன்று இது தொடர்பில் எடுக்கும் தீர்மானம் நாம் மறைந்த பின்னும் சரி, எமது ஆட்சிக்காலத்தின் பின்பும் சரி எமது மககளின் அரசியல் உரிமைக்கும் அபிலாசைகளுக்கும் விட்டுச் செல்லும் படிக்கல்லாக இருக்க வேண்டுமே அன்றி இருண்ட பக்கஙகளைக் கொண்ட வரலாற்றுவடுவாக இருக்கக் கூடாது என்ப தையும் இந்த கௌரவமான சபையின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். இந்த சபையானது ஓர் விவேகமான தீர்மானத்தை மேற்கொள்ளும் என்ற பூரண நம்பிக்கை அனைவருக்கும் உள்ளது.

மாநகரசபை உறுப்பினர் நாகூர்கான் றம்ழான் அவர்களின் பிரேரணை மேற்படி சபையில் வாசிக்கப்பட்டது.

உள்ளூராட்சி திருத்தச் சட்ட மூலத்தினை நிராகரிக்க கோரும் பிரேரணை 16-04-2009 ஆம் திகதி இடம்பெறும் சபை கூட்டத்தின் போது இப பிரேரணையை முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழஙகுமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

உள்ளூராட்சி அதிகார சபைகள் (விஷேட ஏற்பாடுகள்) திருத்தச்சட்ட மூலத்தினை அரசாங்கம நிறைவேற்றுவதற்காக கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு எதிர்வரும் 17-04-2009 ஆம் திகதி இடம் பெறவிருக்கும் கிழக்கு மாகாண சபையின் அமர்வின் போது இவ்விடயம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட ஏற்பாடாகி இருக்கிறது. குறித்த திருத்தச் சட்ட மூலம் சிறுபான்மையினர்களுக்கு ஏற்படுத்தப்பட போகும் பாதப்புக்களை கவனத்திற்கொண்டு கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் அனைவரும் ஆளும் தரப்பு எதிர்தரப்பு என்ற வேறுபாட்டிற்கு அப்பால் திருத்தச் சட்ட மூலத்தினை நிராகரிக்க வேண்டும்.

உள்ளூராட்சி மாற்றங்களை கட்டுப்படுத்துகின்ற சகல அதிகாரங்களும் 100 வீதம் மாகாண சபைக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரமாக இருக்கின்ற இன்றைய நிலையை மாற்றியமைத்து எதிர்காலத்தில் உள்ளூராட்சி மாற்றங்களை செய்கின்ற அனைத்து அரசியல் அதிகாரங்களையும் மத்திய அரசாங்கத்தின் கீழ் அல்லது அமைச்சரின கீழ் கொண்டு வருவதற்காக அரசு மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை சிறுபான்மையினரின் அரசியல் அதிகாரங்களை திட்டமிட்டு பறிக்கின்ற செயற்பாடாகும்.

இச் சட்டம் மூலம் முன்னைய வட்டாரத் தேர்தல் முறையை புதுப்பிக்கின்ற வகையில் அமைந்துள்ளதால் சிங்கள பகுதிகளில் சிறுபான்மையிராக வசிக்கும் தமிழ், முஸ்லீம் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் முற்றுமுழுதாக இல்லாமல் போகும் அல்லது வெகுவாக குறைந்து விடும் அபாயம் ஏற்படும் தெற்கில் சிறுபான்மையாக வாழுகின்ற தமிழ் முஸ்லீம் மக்களின் அரசியல் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கட்டாயமாக கடமையும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழுகின்ற தமிழ் முஸ்லீம் மக்களாகிய நாம் இச் சட்ட மூலத்தினை நிராகரிப்பதன் மூலமே தங்கியிருக்கின்றது. இந்த நடவடிக்கை மூலமே தெற்கில் உள்ள எமது சிறுபான்மை சகோதரர்களின் அரசியல் உரிமைகளை பாதுகாக்க முடியும்.

மற்றும் இச்சட்டமூலம் உள்ளூராட்சி வட்டாரங்களில் எல்லைகளைத் தீர்மானிக்கின்ற அல்லது வரையறுக்கின்ற முழு அதிகாரங்களும் அமைச்சின கீழ் கொண்டு வரப்படுகின்றது. சிறுபான்மையினருக்கு பாரிய அளவிலாக பாதிப்பும் அபாயமும் எதிர்காலத்தில் காத்திருக்கின்றது. இதற்கு கடந்த கால வரலாறுகள் சான்று பகிர்கின்றது. உதாரணமாக மகோயா, கிராந்துருக்கோட்டை, பதியத்தலாவ போன்ற பகுதிகள் அம்பாறை மாவட்டத்துடன் இணைத்து அம்பாறை மாவட்ட தமிழ் முஸ்லீம்களை சிறுபான்மையாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாகும்.

அது மாத்திரமின்றி தேர்தல் வாக்களிப்பில் கடந்த காலத்தில் நடைமுறையிலிருந்த 12.5 வீதம் வெட்டுப்புள்ளியினைக் கொண்டு எமது சிறுபான்மையினரின் அரசியல் அதிகாரங்களை மட்டுப்படுத்தியிருந்த போதும் எமது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவரும் மாமனிதருமான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அவர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 12.5 வீதமாக இருந்த வெட்டுப்புள்ள வீதத்தினை 5வீதமாக குறைத்து சிறுபான்மையினரின் அரசியல அந்தஸ்த்தினை ஸ்திரப்படுத்தினார். அவ்வாறு பெறப்பட்ட சிறுபான்மையினரின் அரசியல் அதிகாரங்களையும் அரசு இன்று திட்டமிட்டு பறித்தெடுப்பதாக மேற்கொள்ளும் இந்த சட்ட மூலத்தினை சிறுபான்மையினராகிய நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

யுத்தம் ஓய்ந்து சமாதானத்தின் மூலம் சிறுபான்மையினர் தங்களது பிரதேசங்களை தாங்களே ஆளும் ஒரு அரசியல் அதிகாரத்தினை பெரும்பான்மை சமூகம் வழங்கும் அல்லது முன் வைக்கும் என சிறுபான்மை சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இத் தருணத்தில் இருக்கின்றதாக கூறப்படும் ஒரு சில அரசியல் அதிகாரங்களையும் தடடிப்பறிக்கின்ற அல்லது இல்லாதொழிக்கின்ற செயற்பாடாகவே இத் திருத்தச் சட்ட மூலத்தினை நாம் நோக்க வேண்டியுள்ளது என்பதனை இச் சபைக்கு சுட்டிக்காட்டுவதோடு 13வது அரசியல் திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரஙகளை கூட இன்னும் முழுமையாக மாகாண சபைக்கு வழங்காமல் மத்திய அரசு தனது அதிகார ஆளுகைக்குள் வைத்துக் கொண்டு கிழக்கில் மத்திய அரசின் ஆதிக்கமே முழுமையாக செயற்படுத்தப்படுகின்ற தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபைக்கு இன்னும் அதன் அதிகாரங்களை மத்திய அரசிடம் இருந்து பெற்றுக்கொளவதற்கு முடியாமல் கிழக்கு மாகாண அமைச்சர்களும், உறுப்பினர்களும் பல்வேறு பத்திரிகை அறிக்கைகளையும் விடுவதோடு சொல்லிக்கொண்டும் இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில் இந்தத் திருத்தச் சட்ட மூலத்தினை சிறுபான்மையினராகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிராகரிக்க வேண்டும் அத்தோடு எதிர்வரும் 14-04-2009 ஆம் திகதி இடம் பெறவிருக்கும் மாகாணசபை அமர்வின் போது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் குறித்த திருத்தச் சட்ட மூலத்தினை நிராகரிக்கக் கோரி எமது சபையினால் தீர்மானமொன்றினை ஏகமனதாக நிறைவேற்றி மாகாண சபைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென இச் சபையில் ஒரு பிரேரணையாக இதனை நான் முன் மொழிகின்றேன்.

மாநகரசபை உறுப்பினர் பெனடிக்ற் தனபால சிங்கம் நாகூர்கான் றம்ழான் அவர்களால் கொண்டு வரப்பட்ட பிரேரணையானது உள்ளூராட்சி திருத்தச சட்ட மூலத்தை எதிர்த்துக் கொண்டுவரப் பட்ட பிரேரணயாகும். இந்தச் சட்ட மூலத்தின் மூலம் ஏற்கனவே கௌரவ ஜனாதிபதி பிரேமதாசா அவர்களால் கொண்டுவரப்பட்ட வெட்டுப்புள்ளி 12.5 வீதம் இதன் மூலம் இலலாதொழிக்கப்படுகின்றது. சிறுபான்மை கட்சிகளின் கோரிக்கைகளும், வேண்டுகோள்களும் முன்னாள் அமைச்சர் கௌரவ அஷ்ரப் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது. இந்த திருத்தச் சட்ட மூலம் உள்ளூராட்சி அமைச்சரினால் முன் கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பாக கௌரவ முதல்வர் அவர்கள் கூறியது போல சகல மாகாண சபைகளாலும் அங்கீகரித்தால்தான் இதனை நிறைவேற்றலாம், ஒரு சபை எதிர்த்தாலும் இதனை நிறைவேற்ற முடியாது. ஏனைய மாகாண சபைகள் ஏற்றுக் கொண்டாலும் கிழக்கு மாகாண சபை ஏற்றுக்கொள்ளக்கூடாது. மேற்கிலும் தெற்கிலும், மலையக த்திலும் தமிழ், முஸ்லீம் மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் துண்டு துண்டாக பிரிந்து வாழ்கின்றனர். இந்த சட்ட மூலத்தின் படி எதிர்காலத்தில் இவர் களின் பிரதிநிதித்துவம் பறிபோகலாம் நாம் தமிழ இனமாக இருந்தாலும் முஸ்லீம் இனமாக இருந்தாலும் எமது பிரதிநிதித்துவத்தை விட்டுக் கொடுக்க முடியாது. எனவே ஏப்ரல் 17ம் திகதி கிழக்கு மாகாண சபையால் கொண்டுவரப்படும் இந்த சட்ட மூலம் தொடர்பான பிரேரணை மாகாணசபைகள் மட்டதில் தோற்கடிக்கப்பட்டால் எமது பிரதிநிதித்துவம் பறிபோகும் எனவே இந்தப் பிரேரணையினை ஆதரிதது வழி மொழிவதுடன் கட்சி பேதமின்றி அனைத்து உறுப்பினர்களும் இந்தப் பிரேரணையினை ஆதரிப்பதோடு உள்ளூராட்சி திருத்தச் சட்ட மூலத்தினை கிழக்கு மாகாண சபை எதிர்த்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

மாநகரசபை உறுப்பினர் கந்தையா அருமைலிங்கம் இலங்கை- இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணசபை ஏறபடுத்தப்பட்டது. அதில் நானும் அங்கத்தவராக இருந்தேன். அப்போது அரசியல் யாப்பில் 13வது திருத்தச் சட்டத்தில் அமுல்படுத்துமாறு மாகாணசபை மூலம் தீர்மானம் மேற்கொண்டும் அது நடை முறைப்படுத்தப் படவில்லை. தற்போது இந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதால் எமது வடக்கு கிழக்கு மாகாண சபை எமது சிறுபான்மை மக்களின் அக்கறை காட்டும் ஒரு சபையாக இருக்குமானால் இந்த உள்ளூராட்சி சட்டமூலத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும். எனவே மேலான இந்த சபையில் இதனை ஒரு தர்மானமாக ஏற்றுக்கொண்டு கிழக்கு மாகாண சபை நிர்வாகத்திற்கு இதனை அனுப்புவதன் மூலம் சிறுபான்மையின மக்களுக்கு நன்றியுடையவர்களாக நாம் இருப்போம். எனவே இந்தப் பிரேரணையினை முன்வைத்த கௌரவ நாகூர்கான் றம்ழான் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்என்றார்.

மாநகரசபை உறுப்பினர் வெலிங்டன் ராஜேந்திர ப்ரசாத் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள இச் சட்டமூலம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை சம்பந்தமாக நாம் அரசாங்க கட்சி என்றாலும் இதனை ஒட்டுமொத்தமாக எதிர்க்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். காரணம் இந்த விடயம் சிறுபான்மை மக்களின் அபிலாசைகள் சார்ந்த விடயம் இதனை நாம் எதிர்க்க வேண்டிய ஒரு சூழ்நிலையில் உள்ளோம். எனவே இந்த பிரேரணையினை நான் ஆதரிக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

மாநகரசபை உறுப்பினர் மகேந்திரமூர்த்தி சுதேந்திரன் அரசினால் கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பாக எனக்கு முன்பு பேசியவர்கள் பலகருத்துக் களைத் தெரிவித்துளளனர். இதில் சில விடயங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக இருந்தாலும், சில விடயங்கள் சிறுபான்மை இன மக்களின் நலனுக்காக குறிப்பாக 15இ,22இ, 06 இ பக்கங்களில் கூறப்பட்ட விடயங்களில் பாதிப்புக்கள் உள்ளன. 'இவை மாகாண சபையால் தீர்மானிக்க வேண்டிய விடயங்கள் இதனை மத்திய அரசு தீர்மானித்துள்ளது. எனவே எமது உரிமைகள் பறிபோவதை நாம் ஆதரிக்க முடியாது. நாம் வடக்கு கிழக்கு மாகாண சபையை ஸ்தாபித்த ஈபி.ஆர்.எல்.எப் கட்சி என்ற வகையில் மாகாணசபை அரசுக்குரிய அதி காரங்களில், மத்திய அரசு தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதை எமது மாநகரசபை யில் உள்ள அனைத்து ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டு இப் பிரேரணையினை கிழக்கு மாகாணசபைக்கு அனுபப வேண்டுமென கோரிக்கை விடுபபதுடன் இதற்கு ஆதரவாக நாளை நடைபெறும் கிழக்கு மாகாண சபை அமர்வில் இச் சட்டமூலத்தை மாகாண சபையின் அனைத்து உறுப்பினர்களும் இணைந்து நிராகரிக்க வேண்டுமென முன்மொழிவதுடன் இத் தீர்மானத்தை ஆதரிக்கின்றேன் எனத்தெரிவித்தார்.

மாநகரசபை உறுப்பினர் ராஜநாதன் பிரபாகரன நாளை மத்திய அரசினால் கொண்டுவரப்படவுள்ள சட்டமூலம மட்டக்களப்பிலுள்ள சிறுபான்மையின மக்களை மட்டுமல்ல அகில இலங்கை ரீதியில் வாழும் தமிழ், முஸலீம் மக்களை பாதிக்கும் ஒரு விடயம். இதனால் இவர்களின் இருப்பிடம், பாரம்பரியம், சூழல் போன்றவை பறிபோகும் நிலை ஏற்படும். இதனை நாம் எதிர்க்க வேண்டும். இநதப் பிரேரணையினை முன் வைத்துள்ளதன்படி தமிழ் மக்களின் விமோசனத்திற்கான ஒரு வரப்பிரசாதமாகும். இந்தப் பிரேரணையினை நான் வரவேற்கின்றேன். எனவே எமது மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதற்கு நாம் உடந்தையாக இருக்க முடியாது. ஈரோஸ் அமைப்பின் தலைவர் என்ற வகையிலும் மாநாகர சபை உறுப்பினர் என்ற வகையிலும் இந்தப் பிரேரணையை ஆதரிக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

பிரதி முதல்வர் ஆபிரகாம் ஜோர்ஜ் பிள்ளை அவர்கள் இலங்கை 1948ம் ஆண்டு பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்பு நடைபெற்ற பல சட்டமூலங்களை நாம் அறிவோம். அன்று தனிச்சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டது. பின் பல்கலைகழக தரப்படுத்தல் சட்டமூலம் கொண்டு

*(தொடர்ச்சி 09ம் பக்கம்...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ம. ஜெயசீலன், திருகோணமலை.*

**லண்டனிலிருந்து நிவாரணப் பொருட்களை வன்னி வாழ் தமிழ் மக்களுக்கு அளிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டதாகக் கூறப் படும் "வணங்கா மண்" என்ற கப்பலின் கதி என்ன?**

இன்னமும் லண்டனில்தான் தரித்து நிற்பதாகக் கேள்விப்படுகி றேன்.- 'வணங்கா மண்' எனப் பெயரிடப்பட்டுள்ளதாகச் சொன்ன உடனேயே புரிந்திருக்க வேண்டும்: இத்தகைய பெயருடைய கப்பலை இலங்கை அரசு தன கடல் எல்லைகளுக்குள் அனு மதிக்காது . இதுவொரு அப்பட்டமான பணம் பண்ணும் நோக்கத் துடன் இணைந்த பகட்டு விளம்பரம் என்று!

இதுபோல்தான் தமிழ்நாட்டிலும், 'படகுகளில் ஈழத்துக்கு பொருட் கள் அனுப்பப் போகிறோம், யார் தடுத்தாலும் எங்கள் பயணம் தொடரும்' என்று கூறி பல இலட்சக்கணக்கான பணத்தையும் பொருட்களையும் தமிழ்நாட்டு அப்பாவி மக்களிடம் திரட்டி கடைசியில் 'இந்திய அரசு அனுமதி அளிக்கவில்லை' என்று கூறி கைவிடப்பட்டு, திரட்டப்பட்ட பணமும் பொருட்களும் சுருட்டப்பட்டு விட்டன. அதே கதிதான் 'வணங்கா மண' கப்பலு க்கும் ஏற்படப் போகிறது என நினைக்கிறேன்.

இன்னலுறும் மக்களின் நிலைமையை வைத்து எவரெல்லாம் எப்படியெல்லாம் பணம் சம்பாதிக்கிறர்கள் என்று நினைக்க இவர்களது மனதில் இத்துணை விவகாரமா என்ற மலைப்புத்தான் மிஞ்சுகிறது! -இவர்களுக்கும், பிள்ளைகளைப் பிடித்து அவர்களின் அவயங்களைச் சிதைத்துப் பிச்சையெடுக்க வைப்பதன் மூலம் மற்றவர்களின் இரக்க மனப்பான்மையைச் சுரண்டிப் பணம் பண்ணும் கிராதிகர்களுக்கும் வித்தியாசம் இல்லை!

*த. கருணாகரன், வவனியா.*

**முல்லைத்தீவின் ஒரு சிறு பிரதேசத்தில் சிக்குப்பட்டிருக்கும் மக்கள அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் களுக்கு, "மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து நீக்கு வதற்கு எவருக்கும் உரிமையில்லை" என எல்.ரீ.ரீ.ஈ தரப்பில் கூறப்படுகிறதே?**

எவர் எதைச் சொல்லலாம் என்பதற்கு ஒரு விவஸ்தையே கிடையாது போலிருக்கிறது!- யாழ் பிரதேசத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றியபோது பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலவந்தமாக எல்ரிரிஈ தங்களுடன் வன்னிக்குச் 'சாய்ச்ச' போதும், ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்களை யாழப்பாணத்திலிருந்து இரவோடிரவாக விரட்டியபோதும் இவர்கள் எங்கே இருந்தார்கள்?-

புலிகள் என்ன செய்தாலும் அது சரியெனச் சப்புக்கொட்டுபவர் கள்தான் இலங்கையின் தமிழ்ச் சமுதாயத்தை இன்றைய அவலத்துக்கு ஆளாக்கியதற்கும் புலிகளின் அழிவிற்கும் கார ணிகளாவர்.- இவர்கள் இனியாவது தங்கள் வாய்களை மூடிக் கொண்டிப்பார்கள் என நினைத்தால், மாறாக தமிழர்களை மேன் மேலும் அதலபாதாளத்திற்குள் தள்ளக் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகிறார்கள்போல் தெரிகிறது.

*ம. ஜெயசீலன், திருகோணமலை.*

**பொதுமக்கள் யுத்தபிரதேசங்களை விட்டு வெளியேறும் வகையில் இலங்கை அரசு போரை நிறுத்த வேண்டும் "மக்களைக் கேடயங் களைாகப் பயன்படுத்தாது அவர்கள் தம்மிச்சையாக யுத்த பிரதேசங்களை விட்டு வெளியேறுவதை எல்ரிரிஈ பலவந்தமாகத் தடுக்கப்படாது" என்பதுதான் சர்வதேச நாடுகளின் நிலப்பாடுகள என்ற போதிலும், ஏன் வெளிநாட்டுத் தமிழர்கள் இலங்கை அரசை மட்டுமே போரை நிறுத்தும்படி வேண்டியும், புலிக்கொடிகளினுட னும், பிரபாகரனின் படங்களுடனும் ஆர்ப்பாட்டங்களில் பங்கு பற்றுகிறார்கள்?**

இதற்குப் பல காரணங்கள் உண்டு:-

(i) புலம்பெயர்ந்த தமிழ் மக்களால் பரவலாகப் படிக்கப்படுவது புலிகளின் பிரச்சார ஏடுகள்; கேட்கப்படுவது புலிகளின் பிரச்சார வானொலிகள்; பார்க்கப்படுவது புலிகளின் பிரச்சார தொலைக் காட்சிகள்!- இதனால் அவர்கள் புலிகளின் பிரச்சாரத்துக்குள் முழுங்கடிக்கப்பட்டும், உண்மை நிலைமைகள் திட்டமிடப்பட்டு மறைக்கப்பட்டும்-திரபுபடுத்தபட்டும் வருகிறது. அந்த அளவிற்கு பணபலத்தாலும், புஜபலத்தாலும் ஊடகங்கள் புலிகள் மயப்படு த்தப்பட்டுவிட்டன. எனவே, அவை மக்கள் நலனைப் பிரதிபலிக் காது, என்றுமே புலிகளின் நலனைத்தான் பிரதிபலிக்கின்றன. மக்கள் நலனுக்கும், புலிகள் நலனுக்கும் பேதங்கள் தெரியாது, புலிகளின் நலன்தான் மக்கள் நலன் என்று ஒரு வித மாயையில் திண்டாடுகிறர்கள்.

(ii) புலம்பெயர்ந்த மக்கள் பலர், தாம் புகுந்த நாட்டில் தமது தனித்தன்மைகளைப் பேணிக்கொண்டு, ஆனால் பெரும்பான்மை சமூகத்துடன் இணைத்துக்கொண்டு வாழாது வேறாக இருக்கி றார்கள். இவர்களுக்கு ஒரு அடையாளம் தேவைப்படுகிறது; ஒரு அந்தஸ்து தேவைப்படுகிறது. அவற்றைப் புலிகள் அளிப்ப தாக தவறாக எண்ணி, புலிகளை வைதது் பணமும் பிரசித்தியும பெறும் சுயநலவாதிகளுக்குப் பலியாகிறார்கள்.

(iii) மனிதாபிமானம் கொண்ட அநேகர், அப்பாவிப் பொது மக் களின் கொலைகளை ஏற்பதில்லை. புலிகளின் பினாமிகள், அக்கொலைகளை மேற்கொள்பவர்கள் இலங்கை அரசு மட்டுந் தான் என்ற பொய்மையை தங்கள் பிரச்சார சாதனங்கள் மூலம் ஏற்படுத்தி மக்களின் கோபத்தையும் பொருமல்களையும் சிங்கள மக்கள் மீதும் இலங்கை அரசாங்கத்தின் மீதும் மட்டுமே திசை திருப்புகிறார்கள்.

(iv) வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்கள், பொருளாதார வச திகளுடனும், தம் வாழ்க்கையை முன்னேறவைப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் மேற்கு நாடுகளின் வாய்ப்புகளைப் பெறுவதற்கும், புலிகளின் போர்தான் காரணம் என்பதால் அவர்க ளுக்கு புலிகள்பால் ஒரு வித நன்றிக் கடப்பாடுடன், தமிழீழம் கிடைத்துவிட்டால் அங்கும் போய் வரும் வாய்ப்புகள் இருப்பது இரட்டிப்பு இலாபம் என நினைக்கிறார்கள்.

(v) இன்னமும் வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து வழங்கபடாது, அவர்களது வழக்குகள் நிலுவையில் இருப்பவர்கள், இலங்கை யில் யுத்தம் முடிவுபெற்றால், அது தங்களுக்கு அனுசரணை யாக இருக்காது, அதனால் தாங்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டு விடுவோம், எனவே போர் தொடர்ந்து இருந்தால் தங்களது அந்தஸ்து கோரிக்கைக்கு அனுகூலமாக இருக்கும் என நம்புகிறார்கள்.

எனினும், எத்தனையோர் அங்குள்ள மக்களின் அவல நிலை மாற வேண்டும் என மானசிக கரிசனையுடனும் கவனஈர்ப்புப் போராட்டங்களில் பங்கு பற்றுகிறார்கள். ஆனால், இந்தப் போரா ட்டங்களில் காவப்படும், அந்த நாடுகளால் தடைசெய்யப்பட்ட புலிகள் அமைப்பின் கொடிகளும், பிரபாகரன் படங்களும் சர் வதேச நாடுகளுக்கு எரிச்சலையும் சங்கடங்களையும் ஏற்படுத்தி, இந்தப் போராட்டங்கள் அங்கு வாழும் மக்களின் இன்னல்களைத் தீர்ப்பதற்காக அல்ல புலிகளின் இருப்புக்காகவே என்ற கணிப்பு க்குக் காரணமாகி விடுகினறன. அதனால் அந்த ஜனநாயக நாடுகளின் முக்கிய அரசியல்வாதிகளும், அமைப்புகளும் ஆர்ப் பாட்டங்களில் போதியளவு அக்கறை காட்டாது, அவற்றை எப்படி ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைப்பது, அவற்றைத் தங்கள்-வாக்கி வங்கிகளுக்கு எப்படிச் சாதகமாக்கிக் கொள்வது என்பதில் மட்டுமே சிரத்தை கொண்டவர்களாக இருக்கிறார்கள்.- இதனால் மக்கள் சக்தி விரயமாக்கப்பட்டு மக்கள்நலன் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடுகிறது.

*ம. ஜெயசீலன், திருகோணமலை.*

**வெளிநாடுகளில் நடக்கும் கவனஈர்ப்புப போராடங்களில் மிகச் சிறிய வயதுள்ள சிறார்கள், 'we want Tamil eelam' Pirabakaran our leader' என்று ஆங்கிலத்தில் கோஷமிட்டு வலம் வர வைக் கப்படுகிறார்கள் என ஒரு நண்பன் கூறுகிறார்- உண்மையா?**

நானும் அதனைக் கேள்விப்பட்டேன். அந்தச் சிறார்களுக்கு தாம் சொல்வது என்ன, எதற்கு என்று விளங்காது! அவர்களை அப்படிச் சொல்ல வைக்கிறார்கள்- அவர்கள் சொல்கிறார்கள்- அவர்களுக்கு அது ஒரு பொழுதுபோக்கு!

பல வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவம் எனது ஞா பகத்திற்கு வருகிறது:-



எனது வீட்டு ஒழுங்கையில் தமிழரசுக் கட்சியினரின் ஊர்வலம் ஒன்று செல்கிறது. நான் எனது வீட்டின் படலை அருகே நின்று அதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அந்த ஊர்வலத்தில் அடுத்த வீட்டு மாமியும், அவருடன் சேர்ந்து சில பெண்களும் செல்கிறார்கள். அடுத்த வீட்டு மாமி "அறுப்போம்! தொடுப்போம்!! எனக் கத்த, மற்றைய பெண்களும் "அறுப்போம்! தொடுப்போம்!!" எனக் கோஷம் எழுப்பிக் கொண்டு அவரைத் தொடர்ந்து செல கிறார்கள்.

நான் (மாமியிடம்): "என்ன மாமி 'அறுப்போம் தொடுப்போம்'?— எனக்கு விளங்கேலை.

மாமி: "அதுதான்டா மோனை! சிங்களவனை அறுப்போம் தொடுப் போம். - வாடா நீயும் சொல்லு "அறுப்போம் தொடுப்போம்".

—சொல்லிக்கொண்டே அக்கோஷத்துடன் ஆக்ரோஷமாகக் கத் திக்கொண்டு அவரும் அவரது சகாக்களும் செல்கிறர்கள்; ஊர்வலம் தொடருகிறது.

பின்னால் வந்த, அந்த ஊர்வலத்தை ஒழுங்கு செய்தவரை அணுகிக் கேட்டேன்:

நான்: என்ன அண்ணை!- 'அறுப்போம் தொடுப்போம்' எண்டு கோஷம் போடுகிறார்கள?

அவர்: அது 'அறப்போர் தொடுப்போம்' என்டதைத்தான் 'அறுப் போம் தொடுப்போம்' என்கிறார்கள்.

நான்: ஏன் அண்ணை, நீங்கள் அதைச் சொல்லித் திருத்தக் கூடாதா?

அவர்: அதெண்டும் தேவையில்லை!- எங்களுக்கு வேண்டியது கூட்டம், பலத்த குரல் முழக்கம்! அவ்வளவுதான்!!- சொல்லிக் கொண்டே அவர் செல்கிறார்.

*இ. திருமுருகன், யாழ்ப்பாணம்.*

**தற்போதைய நிலைமைகள் குறித்துப் பேசுவதற்கு ஸ்ரீலங்காவின ஜனாதிபதி மகிந்த ராஜபக்சாவின் அழைப்பை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்தது சரியா?**

பிழை!- பிரச்னைகள் பேச்சு வார்த்தைகள் மூலந்தான் தீர்க்கப்பட வேண்டும் என்பது இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்ட முறை மை. எனவே ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அங்கு தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்திருக்கலாம்; விவாதங்கள் மூலம் தங்கள் கருத்துக்களுக்குப் பலம் சேர்த்திருக்கலாம். தங்கள் கருத்துக்கள் நிராகரிக்கப்பட்டால், பேச்சுவார்த்தைகளின் பின்னர் அறிக்கை மூலமாக என்ன நடந்தது என்று இலங்கை மக்களதும், சர்வதேச நாடுகளதும் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கலாம். அதை விட்டு, 'போகமாட்டோம்' என்று அடம் பிடிப்பதில் என்ன பலன்? பேசி விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்குத்தானே அவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள். இல்லை யென்றால் பாராளுமன்றப் பதவிகளை ஏன் இன்னமும் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்? விட்டால் அவற்றினை மற்றைய தமிழ்க் கட்சியினர் நிரப்பி விடுவார்கள் என்பதுதான் காரணம் என்றால், இப்படி இவர்கள் போகாதிருப்பதனால்தான் இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தைகளில் இவர்களின் வெற்றிடங்கள் மற்றைய தமிழ்க் கட்சியினரால் நிரப்பப்படுகின்றன! – பாராளு மன்றக் கதிரைகளும் அவை தரும் சுகபோகங்கள் என்றால் ஒரு நியாயம், பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுதல் என்றால் வேறொரு நியாயமா?- என்னங்கடா இது!

*ப. மகேஸ்வரன், கொழும்பு.*

**வெளிநாட்டில் வாழும் தமிழ் மாணவ இளைஞர்கள் பலர் இப் போதைய கவன ஈர்ப்புப் போராடங்களில் பங்கு கொள்வது பற்றி உங்கள் கருத்து என்ன?**

தமிழ் மாணவ இளைஞர்களின் சமுதாயப் பிரக்ஞை வரவேற்கத் தக்கது! இந்தப் பிரக்ஞை, போரற்ற சூழ்நிலையில் எதிர்காலத்தில இலங்கையில் தமிழ்ச் சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்ப காத் திரமானதும், ஆக்கபூர்வமானதுமான பங்கினை இவர்கள் ஆற்று வதற்குப் பயன்படுவதற்கான சமிக்ஞைகள் இவை. ஆனாலும், இப்பொழுது ஒரு சாராரின் பிரச்சாரத்தில் மட்டும் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரது தப்புகளை அவர்கள் அறியாதவாறு இருப்பதனால் அவர்களது சக்தி வீணடிக்கப்படுகிறது; துஷ்பிர யோகங்களுக்குள்ளாகிறது. இந்த மாணவ இளைஞர்களின் இப்போதைய நிலைமையை எண்ணும்போது ஒரு பாடலின் பின்வரும் வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றன-

"வேங்கயதன் பின்னே
வெள்ளாடு போவதென்ன?-
கள்ள மனம் காட்டும வழி
நல்ல மனம் நடப்பதென்ன?"

*அ. மகாலிங்கம், லண்டன்*

**இலங்கை அரசு போரை நிறுத்தும் வரை லண்டனில் "சாகும்வரை உண்ணாவிரதம்" இருந்தவர்களில் ஒருவர், ஐக்கிய நாடுகள் அமைப்பில் பேசச் சந்தர்ப்பம் பெற்றுக்கொடுப்பதாக பிரித்தானிய பாராளுமன்ற அங்கத்தவர் அளித்த உறுதியை ஏற்றுத் தனது உண்ணாவிரதத்தைக் கைவிட்டு விட்டாராமே?**

இந்த உண்ணாவிரதம் போன்ற நிகழ்வுகள், புலிகளின் கரும்புலித் தற்கொலைதாரிகள் போன்று மற்றைய நாடுகளின் ஆர்ப்பாட்டக் காரர்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக அமைவதற்கு வழிவகுக் கும் சாத்தியக்கூறுகள் இருக்கும் என நினைக்கிறேன்- அதைப் பற்றி நாமல்ல, அந்தந்த அரசாங்கங்கள்தான் கவலைப்பட வேண்டும்!

உண்ணாவிரதம் மேற்கொண்ட இளைஞர், புலிகளின் சர்வதேசப் பிரதிநிதியாக தேடப்படும் குற்றவாளியாக சர்வதேசப் பொலிசி னால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒருவர் - இவர்கள்தான் தமிழ்மக்க ளுடைய அவல நிலையை உலக நாடுகளுக்குக் கூற வேண்டிய நிலைமையென்றால். தமிழர்களின் அரசியல் முன்னெடுப்புகளின் இலட்சணத்தைப் பாருங்கள்!

மேலும், அந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்ட இளைஞர் சமீபத்தில்தான் வன்னியிலிருந்து லண்டனுக்கு வந்தவர் எனக் கேள்விப்படுகிறேன். அவரது செயற்பாடு இலங்கையில் போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்துமோ தெரியாது, ஆனால் நிச்சயமாக அவரது அகதி அந்தஸ்து கோரிக்கை தனக்குச் சாதகமாக முடிவு செய்யப்படுவதை உறுதிசெய்து கொண்டு விட்டார்!- என்ன இருந்தாலும் தமிழர்களின் மூளை தங்களது தனிப்பட்ட காரியத்தை எயதுவதில் தனி விசேஷந்தான்!!

*க. இராமநாதன், மட்டக்களப்பு.*

**இந்த கொடூரமான போரினால் எத்தனையோ தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களது உயிர்கள் அழிகின்றனவே?**

பல்லாயிரம் பிணங்கள் படிக்கற்கள்-
சில்லறைகள் சிலர் சிம்மாசனம் ஏறுவதற்கு!

## உள்ளூராட்சி திருத்தச் சட்ட..........

*08ம் பக்கத் தொடர்ச்சி*

வரப்பட்டது. இதனால் தமிழ் சிங்கள மக்களிடையே இருந்த நல்லுறவு பிரிக்கப்பட்டது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கென சர்வ கட்சி மாநாடு நடைபெற்றுவரும் இவ் வேளையில் சிறுபான்மையினரை பாதிக்கும் சட்ட மூலத்தை அமுல்படுத்துவது அர்த்தமற்ற ஒன்றாகும். இந்த நாட்டில் சகல இனத்தவர்களும் சமத்துவத்துடன் வாழவேண்டும் எனும் கோட்பாட்டில் தான் நாட்டிற்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. பேரின வாத சக்திகளால் தமிழ் சிங்கள மக்களின் நலலுறவுகள் பாதிக்கப்படுவது கவலைக்குரிய விடயமாகும். இதனை நாம் எதிர்க்க வேண்டும். இதன்படி இப் பிரேரணையினை நான் ஆதரிக்கின்றேன் எனத்தெரிவித்தார்.

மாநகரசபை உறுப்பினர் கந்தசாமி தவராசா எமது தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் சிறுபான்மை சமூகத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. சுதந்திரம வழங்கப்படவில்லை. நாம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மூலமாக அரசுக்கு ஆதரவு வழங்கிக் கொண்டு இருககும் இவ் வேளையில் வரலாற்று ரீதியிலான ஒரு சட்டமூலத்தை கொண்டு வந்து எமது மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை நாம் எதிர்க்கின்றோம். இந்தச் சபை சிறுபான்மை மக்களின் நலனுக்காக இந்த விடயத்தை உடனடியாக மாகாண சபைக்கும் உரிய உத்தியோகத்தர்களுக்கும் அனுப்ப வேண்டும் எனத்தெரிவிப்ப தோடு இந்தப் பிரேரணையினை ஆதரிக்கின்றேன் எனத் தெரி வித்தார்.

மாநகரசபை உறுப்பினர் தெய்வநாயகம் வீரசிங்கம் சத்திய நாதன் நாளை கொண்டுவரப்படவுள்ள உள்ளூராட்சி திருத்தச்சட்ட மூலத்தை எதிர்ப்பதற்காக கெளரவ நாகூர்கான் றம்ழான் அவர் களால் கொண்டு வந்த பிரேரணையினை ஆதரித்து நான் உரை யாற்றுகின்றேன். வடக்கு கிழக்கு மாகாணசபை கலைந்து கிழக்கு மாகாணசபை ஆரம்பிக்கப் பட்டு ஒரு வருடம் முடியாத நிலையில் கொண்டுவரப்படவுள்ள இந்தச் சட்டமூலம் எமது பாரம்பரிய பிரதிநி [illegible] குழிதோண்டி புதைக்கும் நிலைக்கு நாம் தள்ளப்படுவோம். எனவே இந்தப் பிரேரணையினை நான் ஆதரிக்கின்றேன். எனத்தெரிவித்தார்.

மாநகரசபை உறுப்பினர் ராஜநாதன் பிரபாகரன் இந்த பிரேர ணையினை இன்று ஆதரிப்பதுடன் நாளை மாகாணசபையில் கொண்டுவரப்படும் பிரேரணையினை எதிர்த்து சபையில் இருந்து வெளிநடப்பு செய்வதென்று தெரிவித்தார்.

முதல்வர் தெரிவிக்கும் போது இது விடயமாக எனது தலைமை உரையில் குறிப்பிட்டது போல் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அவர்களால் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டமூலம் எங்களது தமிழ் மக்கள் பாதிப்படைவார்கள் என்பதை உறுப்பினர்கள் தெளிவாக குறிப்பிட்டுள்ளனர். இச் சபையானது தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்படும் சந்தர்ப்பத்திலெல்லாம் குரல் கொடுத்து வந்திருக்கிறது. எதிர்காலத்திலும் இவ்வாறே குரல் கொடுக்கும்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளாகிய நாம் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது மக்களின் அபிவிருத்திக்காக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளியாகி அதன் சின்னத்தில் போட்டியிட்டிருந்தோம். இருப்பினும் எமது தமிழ் பேசும் மக்களுக்கு குந்தகம் விளைவிக்கும் எந்த செயற்பாடுகளா னாலும் அவற்றிற்கு எதிராக குரல் கொடுப்பதோடு ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியில் ஒரே குடும்பமாக இருக்கும் நாம் அரசினால் பல தவறுகள் இழைக்கப்படும் போது அதனை சுட் டிக்காட்ட வேண்டிய பாரிய பொறுப்பும் எமக்குணடு. எனவே இப் பிரேரணையினை ஏகமனதாக சபையால் ஏற்றுக்கொள்ளலாம் எனத்தெரிவித்தார்.

மாநகரசபை உறுப்பினர் கந்தையா அருமைலிங்கம் பிரேர ணையினை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதன் பேரில் இந்த தீர்மானத்தை மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு அனுப்புவதுடன் நாளை மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இச் சட்டமூலப் பிரேரணையினை எதிர்த்து நான் சபையில் இருந்து வெளிநடப்பு செய்கின்றேன். இதற்கு சகல உறுப்பனர்களும் ஆதரவு தெரிவிக்க வேண்டும். இதன்படி சபை ஒத்தி வைக்கப்பட்டு சபையில் இருந்து முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

16-04-2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரகத்து வாழ்வு தமிழ் மக்களுக்கு விதிக்கப்பட்டதல்ல.

# இனியொரு விதி செய்வோம்!

புதுமாத்தளன் பகுதியில் வெறும் 20 ச.கி.மீ பரப்பளவினுள் முடக்கப்பட்ட மக்கள் புலிகளின் மண் அணை அரண் படையினரால் உடைக்கப்பட்டதன் பின்பு ஆயிரக்கணக்கில் வெளியேற தொடங்கியிருக்கிறார்கள். உடைக்கப்பட்ட பகுதியினூடாக மாத திரமல்ல கடற்கரை ஊடாகவும் படகுகள் மூலம் பல நூற்றுக்கணக்கானோர் வெளியேறியுள்ளனர்.

கடந்த இரண்டு மூன்று நாட்களில் மாத்திரம் லட்சம் பேர்வரை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் அவர்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் யுத்த சூனியப் பிரதேசத்தில் மரணத்தின் கோர முகத்தைப் அனுபவித்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

இந்த மக்களின் மனங்களில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதே இங்கு பெரும் சவாலான பணியாகும்.

சமகாலத்தில் உலக மானிடம் படாத துன்பங்களையெல்லாம் அவர்கள் பட்டிருக்கிறார்கள். அவர்களின் இழப்புக்கள், துயரங்கள் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை. எத்தனை தடவை அவர்கள் இடம் பெயர்ந்திருக்கிறார்கள். எத்தனை பிள்ளைகளை, சொந்த பந்தங்களை, உற்றார் உறவுகளை இழந்திருக்கிறார்கள்.

இத்தனை சுமைகளுடன் அவர்கள் உயிர் வாழ்தலுக்காக ஓடிய ஓட்டம் ஆளில்லா வானூர்தியிலிருந்து எடுக்கப்பட்ட படங்கள் உறுதி செய்கின்றன. மனிதர்களில ஒரு பகுதியினர் இவ்வாறு உயிர் வாழ்தலுக்காக ஓடிக்கொண்டிருக்கும் போது நாம் நாகரீக உலகை சேர்ந்தவர்களென கூறிக்கொண்டு வாழ்வது அவமானகரமானதாகும்.

உயிர்ப் பையை பிடித்துக் கொள்வதற்கான இந்த ஓட்டத்தில் ஆங்காங்கே துப்பாக்கிச் சூட்டுக்கும் செல் வீச்சுக்கும் ஆளாகி உயிரை பாதுகாக்கும் ஆசை நிராசையாகி போனவர்களை நினைத்துப் பாருங்கள். வெட்ட வெளியில் மானிட பூச்சிகளாய் வீழ்ந்து போனவர்களை நினைத்துப் பாருங்கள்.

வாழ்வதற்கான ஓட்டத்தில் தோற்றுப் போனவர்கள், அவர்களின் பிரிவால் துயருரும் உற்ற சுற்றத்தை நினைத்துப் பாருங்கள்.

இயற்கையாய் மனிதருக்குரிய அத்தனை அவயங்களுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ்ந்த மனிதர்கள் ஒரேயடியாக ஊனமுற்றுப் போகும்போது அந்த மனிதரின் மனோநிலையை நினைத்துப் பாருங்கள்.

பிறந்தவுடனேயே ஊனமுற்றுப் போன குழந்தையின் கதறலை நினைத்துப் பாருங்கள்.

பீரங்கிகள், விமானக்குண்டுகள், தற்கொலை குண்டுகள் நடுவே காப்பரணுக்குள் வாழ்ந்த, வாழ்கின்ற சந்ததியை நினைத்துப் பாருங்கள்.

சமகாலத்தில் இவ்வாறு வருடக் கணக்கில் யாரும் காப்பரண்களுக்குள் வாழ்ந்ததில்லை.

ஏன் இவற்றை இங்கு குறிப்பிடுகிறோம். ஏன் இவற்றை இங்கு ஆழமாக சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்



ஏதோ தவறு நேர்ந்துவிட்டது, மனிதர்கள் துன்பங்களை அனுபவித்து விட்டார்கள் என்று எளிமையாக சமாதானம் சொல்லிவிட்டு செல்ல முடியாது.

இந்த இரத்த கணக்கிற்கு விடை வேண்டும். ஏனெனில் பயங்கரவாதம் ஒழிந்து விட்டால் சிறுபான்மை சமூகங்களுக்கு பிரச்சினையில்லை என்றவொரு தோற்றப்பாடு, கருத்து தற்போது உருவாகியிருக்கிறது.

60 ஆண்டுகளுக்கு மேலாக தாம் இந்த நாட்டில் சமத்துவமாக வாழ்வதற்கான கோரிக்கையை தமிழர்கள் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இறுதி 30 ஆண்டுகளில் தமது உரிமைகளுக்காக அவர்கள் செலுத்திய விலை இங்கு வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

இன உரிமைககான, சமத்துவத்துக்கான தமிழர்களின் கோரிக்கை அவர்கள் மத்தியிலேயே புலிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனநாயக விரோத போக்குகளால் பலவீனப்படுத்தப்பட்டது. தமது இன உரிமைக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் அவர்கள் போராட வேண்டியிருந்தது.

வாழ்க்கை ஈவிரக்கமற்றதாக மாறியது. இறுதியில் தற்போதைய குரூர நிலையை எய்தியுள்ளது.

அவர்கள் பிச்சைக்காரர்களை விட கீழான நிலையில் அடிமைகளாக வெவ வேறு எஜமானர்களுக்கு கீழ் வாழ நிர்பந்திக்கப்பட்டார்கள்.

தற்போது அதன் கோர முகத்தை நாம் கண்ணால் கண்டுகொண்டிருக்கிறோம். வைத்தியசாலை விறாந்தைகளில் காயமடைந்த குழந்தைகளின் கதறலை கேட்கிறோம். இனம்புரியாத மனித அவல ஓலங்கள் எம் காதுகளை நிறைக்கின்றன.

இரத்த வாடையும் மனிதர்களின் கோர மரணமும் எங்கள் கண்களில் அன்றாட காட்சிகளாகி விட்டன. பட்டினியின் கோரச்சாயலுடன் எமது மக்களை பார்க்கின்றோம்.

எமது கையறு நிலை எம்மீதே எமக்கு கோபத்தை வரவழைக்கிறது. இப்படியே ஒரு சமூகம் இனியும் வாழ்ந்து முடிக்க முடியாது. அதனை அனுமதிக்கவும் முடியாது.

தமிழர்கள் தமது பிரதேசங்களில் தங்களைத் தாங்களே நிர்வகிப்பதற்கான கட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்படுவது தற்போதைய மனிதாபிமானப் பணிகளுடன் சமாந்தரமாக முன்னெடுக்கப் படுவது அவசியமானதாகும்.

இது முஸ்லீம், மலையக மக்களுக்கும் பொருத்தமானவை. பல்லினங்களின் ஜனநாயக தேசமாக இலங்கையை கட்டியெழுப்புவதே நாம் இந்த இழப்புக்களுக்கும் துயரங்களுக்கும் ஈடுகட்டகூடிய உண்மையான நிவாரணமாக இருகக முடியும். -ஸ்ரீ-

# மாற்றுப் பயிர்ச்செய்கையால் ஏற்படப் போகும் பாதிப்புகள்

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தனியார் மயக்கொள்கைகள் பெருந்தோட்டத்துறையான தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய வற்றையும் கூட விட்டு வைக்கவில்லை.




1972ம் ஆண்டு தோட்டங்கள் தனியார் மயமாக்கலுக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும அது பாரியளவில் வெற்றியளிக்கவில்லை. கொழும்பில் பல அரச கம்பனிகள் தனியார் மயமாக்கப்படுவதற்கு எடுத்த முயற்சிகளும் தோல்வியில் முடிவுற்றன. இருப்பினும் பெருந்தோட்டங்கள் திட்டமிட்ட முறையில் தனியார் மயப்படுத்தப்பட்டன.

இதன் விளைவுகள் தோட்டத்தொழில்துறையை மட்டுமல்லாது தொழிலாளர்களையும் பாதிக்கும் என கூறியபோதிலும் அவை செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது.

இந்த தனியார் மயமாக்கலின் விளைவுகள்தான இன்றைய உலகமயமாக்கலாகும் இதன்மூலம் பல்தேசியக் கம்பனிகளே நன்மையடைகின்றன. இவ்வாறான பல் தேசியக் கம்பனிகளின ஏகபோகம் நாடுகளின் அரசியலையும் தீர்மானிக்கும சக்திகளாக தம்மை இனங்காட்டும் வகையில் வளர்ந்துள்ளன. உலகமய மாக்கலின் தாக்கம் இன்று அனைத்து நாடுகளையும் ஆட்டிப் படைக்கின்றது. பொருளாதார ரீதியில் ஆட்டம் கண்ட நாடுகளிலிருந்து பல் தேசிய கம்பனிகள் தங்களின் மூலதனத்தை சுருட்டிக கொண்டு தங்களின் முதலீட்டுக்கு சாதகமான நாடுகளை நோக்கி படையெடுக்கின்றன. பல நாடுகளில் தொழிற்சாலைகள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி மூடப்பட்டு தொழிலாளர்கள் வீதிக்கு வந்தமையை காண்கிறோம். இவ்வாறான நிலைமைகள் நமது நாட்டிலும் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடைபெறுவதை காண முடிகின்றது. உதாரணமாக அண்மையில் பத்தனை போகாவத்தை பகுதியில் ஒரு தோட்டத்தில் கர்ப்பிணி பெண்மணியொருவர் எக்காரணமுமின்றி வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். இது போன்ற இன்னும் பலவற்றை கூறமுடியும். இருப்பினும் தற்போது போர்மய மாக்கப்பட்ட நமது நாடு வடபகுதி போர்முனை வெற்றி செய்திகளில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றையும்விட தொழிலாளர்களின் இருப்பை சிதைக்கும் கருங்காலித்தனமான செயற்பாடுகள் மறைமுகமாக நடைபெறுகின்றது. அதுதான் தேயிலைத் தோட்டங்களில் கருவா பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.


இலங்கையில் தேயிலை, றப்பர், தென்னை ஆகிய பெருந்தோட்டங்களை நீண்டகால குத்தகைக்கு எடுத்துள்ள இந்த பல்தேசியக் கம்பனிகள் இலாபத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன. தொழிலாளர்களின் நலனில் அக்கறைகொள்ளாத நிலையே காணப்படுகிறது. உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக தேயிலையின் விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக நொண்டிக்காரணங்களைக் கூறி வருகின்றன.


இந்நிலையில் இக்கம்பனிகள் தொழிலாளர்களை இல்லா தொழிப்பதுடன் தோட்டக் காணிகளை நீண்ட மற்றும் குறுகியகால பயிர்ச்செய்கைகளுக்காக பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. சில தோட்டங்களில் உருளைக்கிழங்கு மற்றும் பயிர்ச்செய்கைகளை பயிரிடத் தொடங்கிவிட்டன. நுவரெலியா, கந்தப்பளை, ஹைபாரஸ்ட் ஆகிய தேயிலைத் தோட்டங்களில் ஊடுபயிராக கோப்பி செய்கை பண்ணப்படுவதை இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தமாக இருக்கும்.

தென்பகுதியிலுள்ள பெரும்பாலான தோட்டங்களில் இறப்பருக்கு பதிலாக பாம் மரங்கள் பயிரிடப்படுகின்றது. வட்டவளை பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான பல தோட்டங்கள் ஹட்டன், காலி ஆகிய பகுதிகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

வட்டவளை பிளான்டேஷனுக்கு சொந்தமான கரோலினா, ஸ்வெதீடன், குயில்வத்தை, கடவத்தை டிவிஷன் ஆகிய தோட்டங்களில் பல ஹெக்டயர் நிலப்பரப்பில் கறுவா பயிரிடப்பட்டுள்ளது. இப்பயிரானது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கறுவாப்பட்டை சேகரிக்கும் விதத்தில் இருக்கப் போகிறது. அவ்வப்போது துப்புரவு செய்தல், பசளையிடுதல் போன்ற சொற்ப வேலைகளுக்கு மட்டுமே தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். தேயிலை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு பதிலாக தேயிலையைவிட அதிக வருமானம் தரக்கூடிய பயிராக கறுவா உற்பத்தி காணப்படுமானால் அதற்கே முக்கியத்துவம் வழங்கப்படுமென கருதப்படுகிறது. இது பெருந்தோட்டத் தொழிலாளர்களை குறைப்பு செய்வதற்கு ஏதுவாக அமைந்துவிடும். ஒட்டு மொத்தத்தில் ஓர் சமூக சிதைவை ஏற்படுத்தலாம்.

மலையக மக்களின் பிரதேச ரீதியான பலம் பலவீனப்படுத்தப்பட்டு அரசியல் அதிகாரங்களை மறைமுகமாக இழக்கும் நிலை தோன்றலாம். தொழிலாளர்களின் வேலை நாள் குறைக்கப்படுவதுடன் பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கு அவர்கள் முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்படும்.





பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான ஒப்பந்தம் காலாவதியானது. மத்திய மாகாணசபை தேர்தலின் போது கட்சிகளின் வேட்பாளர்கள் ஏட்டிக்குப் போட்டியாக தொழிலாளர்களுக்கான சம்பளம் 500, 600, 700 ரூபாய் என வாக்குறுதியளித்தனர். தொழிலாளர்களோ தமக்கு பெருந்தொகை நாட்சம்பளத்தை பெற்றுத் தருவார்கள் என எண்ணி வாக்குகளை வேட்பாளர்களுக்கு அள்ளி வழங்கினார்கள். வேட்பாளர்களோ வெற்றியில் திக்குமுக்காடி போனார்கள்.

மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் இவ்வாறான மாற்றுப் பயிர்ச்செய்கை தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். தொழிலாளர்களின் இருப்பை உறுதிப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு முன்வர வேண்டும்.

அட்டைககடிக்கு மட்டும் உள்ளாகி வந்த பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்வரும் காலங்களில் பாம்புக்கடிக்கும் ஆளாக நேரிடலாம். அதுவரை காத்திராமல் மக்களின் இருப்பையும் தொழிலையும் பாதுகாக்க சகல தரப்பினரும் ஒன்றிணைந்து பல்தேசியக் கம்பனிகளின் நயவஞ்சக நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முன்வருமாறு அறைகூவல் விடுக்கின்றோம்.

மோகன் சுப்பிரமணியம்

இணைப்பாளர்
பெருந்தோட்டத் தொழிலாளர்
சேவை நிலையம், ஹட்டன்

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் இணைந்த கூட்டமைப்பு

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் C.R.C Press 119 University Road Rattanapitiya Boralesgamuwa அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org